# தமிழர் பொருளியல்

## வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 98

23.02.2025





# எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முதுகெலும்பாக அமைந்துள்ள சுற்றுலாத்துறை

## இலங்கையில் தங்க முதலீடு மற்றும் பங்குச் சந்தை முதலீடு; சமகால நிலை மற்றும் வாய்ப்புகள்

10

## சர்வதேச தாய்மொழி தினம்

13

## ஆட்டுப் பண்ணை தோல்விக்கான காரணங்கள்

20

## இணைய வணிகமும் அதன் அடிப்படைகளும்.

16

பொருளாதாரம் | சுற்றுலாத்துறை | வணிகம் | தொழில் முனைவு | விவசாயம்

# கறவை மாடு வளர்ப்பில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு

சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்
(BVSc, MVS)



**கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதனை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.**

இன்றைய நவீன உலகில் செயற்கை நுண்ணறிவு நுழையாத இடமே இல்லை எனலாம். செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் முன்னைய காலத்தில் மனிதனால் செய்யவே முடியாது எனக் கருதப்பட்ட பல காரியங்களைச் செய்ய முடிகிறது. அதீத உழைப்புடன் செய்யப்பட்ட பல காரியங்களையும் இலகுவாகச் செய்ய முடிகிறது. இந்தக் கட்டுரை கறவை மாடு வளர்ப்பில் செயற்கை நுண்ணறிவின் (Artificial intelligence – AI) இன்றைய பயன்பாட்டையும், நாளைய எதிர்பார்ப்பையும் ஆராய்கிறது. அதிகரித்துவரும் மனிதச் சனத்தொகை காரணமாக ஏற்பட்டுள்ள உணவுத் தேவை அதிகரிப்பு, கால்நடை வளர்ப்பையும் வினைத்திறன் மிக்கதாக மாற்றவேண்டிய தேவையைத் ஏற்படுத்தி யுள்ளது. ஏனைய துறைகளைப் போல இங்கும், வினைத்திறனான உற்பத்திச் செயன்முறைக்கு செயற்கை துண்ணறிவு பயன்படத் தொடங்கியுள்ளது.

பொதுவாக மாடு வளர்ப்பு, மேய்ச்சலை நம்பிய ஒரு பாரம்பரியமான தொழிலாகும். மாடுகளின் உணவுக்குத் தேவையான புற்கள் காணப்படும் இடங்களை நோக்கி மாடுகளை ஓட்டிச் செல்லும் மேய்ச்சல் முறையாகவேமாடுவளர்ப்புஅமைந்திருந்தது. பிற்காலத்தில்மாடுகளைஓரிடத்தில்வளர்த்து அவற்றுக்கு தேவையான புற்களை பயிரிட்டும், தேவையான அடர்வுத்தீவனத்தை வழங்கியும்வளர்க்கமுடிந்தது. இன்றுநவீன செயற்கை நுண்ணறிவு மூலம் ஒவ்வொரு மாடாகக் கவனித்து அவற்றுக்கு வேண்டிய விடயங்கள் கணிக்கப்பட்டு உணவாக வழங்கப்படுகின்றன. கறவை மாட்டுப் பண்ணைகளிலும், ஏனைய கால்நடை வளர்ப்புச் செயன்முறைகளிலும் ஆரம்ப கட்டத்திலேதான் செயற்கை நுண்ணறிவின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. வளர்ந்த நாடுகளில் செயற்கை நுண்ணறிவின் செயற்பாடுகள் ஓரளவுபயன்படுத்தப்படுகின்ற அதேவேளை வளர்முக நாடுகளில் மிக மிகக் குறைவாகவே அவற்றின் வகிபாகத்தைக் குறிப்பிட முடியும். நான் சில மாதங்களுக்கு முன் எழுதியிருந்த இஸ்ரேலின் கால்நடை வளர்ப்புத் தொடர்பான கட்டுரையில், இஸ்ரேலில் கால்நடை வளர்ப்புத் தொடர்பான செயற்கை நுண்ணறிவின் வகிபாகத்தை எழுதியிருக்கிறேன். இஸ்ரேல் கால்நடை வளர்பில் செயற்கை நுண்ணறிவை உச்ச அளவில் பயன்படுத்தும் நாடாகும். இலங்கையைப் பொறுத்தவரை ஓரளவு பெரிய பண்ணைகளைத் தவிர ஏனைய இடங்களில் அவற்றின் அரிச்சுவட்டைக் கூட காணமுடியாது. பெரிய பண்ணைகளிலும் பால்கறத்தல், உணவுக்கலவை மற்றும் ஓரிரு முகாமைத்துவச் செயற்பாடுகளில் மாத்திரமே செயற்கை நுண்ணறிவு பயன்படுகிறது.

இந்தக்கட்டுரையில்வளர்முகநாடுகளில் எவ்வாறெல்லாம் செயற்கை நுண்ணறி வு கறவைமாட்டுப்பண்ணைகளில்செயற்படுகி றது என்பதையும், இலங்கையில் எவ்வாறு அதனைப் பயன்படுத்த முடியும் என்பதையும் சுட்டிக்காட்ட முயல்கிறேன்.

### கறவை மாட்டுப் பண்ணைகளில் செயற்கை நுண்ணறிவு பயன்படும் இடங்கள்

**1. சுகாதார மேம்பாட்டுச் செயற்பாடு :**

மாடுகளில் பொருத்தப்படும் கழுத்துப் பட்டிகள் (Collars with sensors), காதுச் சுட்டிகள் (ear tags), கால்களில் பொருத்தப்பட்டுள்ள 'pedometer' உபகரணம், வீடியோ கமராக்கள், சென்சார்கள் மூலம் அவற்றின் செயற்பாடுகள் அவதானிக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் உடலின் வெப்பநிலை, சுவாச வீதம், இதயத் துடிப்பு, நாடித்துடிப்பு, அவை நடக்கும் விதம், எழும்பியிருக்கும் –படுத்திருக்கும் விதம், அசையூண் இரப்பை அசைவு, ஓமோன்கள், பால் மற்றும் ஏனைய உடற் திரவங்களின் மாற்றங்கள் என்பவற்றை அறிந்து கால்நடைகளின் நிலையை அவதானிக்க முடியும். நோய் நிலையை முன்கூட்டியே அறிந்துசிகிச்சையைஆரம்பித்து, நோய்நிலை முற்றுவதைத் தவிர்த்து, உயிரிழப்பைத் தவிர்க்க முடியும். இதனால் மருத்துவச் செலவைக் கணிசமாகக் குறைக்க முடியும். தேவையற்ற நுண்ணுயிர்க் கொல்லி மருந்துப் பாவனையைத் தவிர்க்க முடியும். இது மனிதச் சுகாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தக் கூடியது.

**2. உணவூட்டல் மேம்பாடு :**

ஒவ்வொரு விலங்குகளின் உணவுத் தேவைகள் கணிப்பிடப்படுகின்றன. உணவுகளிலுள்ள கூறுகளின் போசணைப் பெறுமதி அறியப்பட்டு விலங்குகளின் அன்றாடத்தேவைக்கேற்பவழங்கப்படுகின்றன (சமச்சீரான தீவனம்). இதன்போது வளர்ச்சி வீதம், உணவு மாற்றுத்திறன் போன்றனவும் அவதானிக்கப்பட்டு,

குறைபாடுகள் களையப்பட்டு, தேவையான தீவனங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன. உணவின் தரம் சோதிக்கப்படுகின்றன. தற்காலத்தில் பல நாடுகளில் கால்நடைத் தீவன உருவாக்கம் (Feed formulation), TMR போன்ற நவீன உணவூட்டல் முறைகள் செயற்கை நுண்ணறிவினாலேயே கலவை செய்யப்படுகின்றன.

தீவனப்புற்கள் வளர்க்கப்படும் மண்ணின் ஊட்டச்சத்துக்கள், ஈரப்பதன் போன்றன கணிக்கப்படுகின்றன. பயிர் நோய்கள் அவதானிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. இதற்கு நவீன சென்சர்களும், ட்ரோன்களும் பயன்படுகின்றன. களை கொல்லிகளும் உரங்களும் மண்ணின் அளவுக்கும் தேவைக்கும் ஏற்ப தானியங்கி முறையிலேயே விசிறப்படுகின்றன. உச்சபட்ச ஊட்டம் உள்ளபோதே கணிக்கப்பட்டு பயிர்களின் அறுவடையும் நிகழ்கிறது; சேமிக்கப்படுகிறது. தீவனப் பயிர்ச் செய்கைக்கு வேண்டிய தண்ணீர் அளவு கணிப்பிடப்படுகிறது. பயிர்ச் செய்கைக்கு ஏற்ற காலநிலை எதிர்வுகூறல் சரியாக இடம்பெறுகிறது.

### 3. இனப்பெருக்கச் செயற்பாடுகள் :

கறவை மாடு வளர்ப்பில் சினைப்பருவ அறிகுறிகளை தெளிவாக அடையாளம் கண்டு சினைப்படுத்த வேண்டியுள்ளது. உடலிலுள்ள ஓமோன் மாற்றங்கள, கால்நடைகளின் இயல்பு மாற்றங்கள் (pedometer, வீடியோ மூலம்) அவதானிக்கப்பட்டு அதற்கேற்ப சினைப்படுத்தல் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன. சில நாடுகளில் சினைப்படுத்துநர்கள், கால்நடை வைத்தியர்களுடன் ஆகியோருடன் மேற்படி விடயங்கள் நேரடியாக இணைக்கப்பட்டு அவர்களே மாற்றங்களை உணர்ந்து சினைப்படுத்த வேண்டிய தருணங்களுக்கேற்ப செயற்பட முடிகிறது (இஸ்ரேல்). இதனால் சினைப்பருவம் தவறும் நிலை தவிர்க்கப்படுகிறது.

மாடுகள் கன்றீனும் தருணங்களில், உடலியல் திரவங்களிலும் நடத்தையிலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இதனைச் சரிவர அறிந்து கொள்வதால், அந்தந்த மாடுகள் மீது அதீத கவனத்தைச் செலுத்தி கன்றீனலை இலகுவாக்க முடிகிறது. கன்றீனும் போது ஏற்படத்தக்க பல பிரச்சினைகள் தவிர்க்கப்படுகிறது.

மேலும், சிறந்த சந்ததிகளைப் பெற வேண்டி, சிறப்பான காளைகளின் விந்தணுக்களைப் பெறக்கூடிய வகையில் அவற்றின் தரவுகள், செயலிகளில் தரவேற்றப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி வளமான தேவையான சந்ததிகளை உருவாக்க முடிகிறது. இது பல நாடுகளில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### 4. பாலின் தரம் :

பாலின் கட்டமைப்புக் கூறுகளின் மாற்றம் அவதானிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக, மடியழற்சி நோயின் போது பாலின் கலங்கள் மற்றும் நுண்ணங்கிகளின் அளவு அதிகரிக்கிறது. இவற்றை அறிவதன் மூலம் முன்சுட்டிய சிகிச்சை செய்யப்பட்டு, பால் பழுதடைதல் தவிர்க்கப்படுகிறது. மடியழற்சி நோயும் ஆரம்ப நிலையிலேயே குணமாக்கப்படுகிறது.

### 5. நடத்தை இயல்புகளை அவதானித்தல்:

மாடுகளின் வழமையான நடத்தைகளில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கும் அதேவேளை, அசாதாரண நடத்தைகள் உடனுக்குடன் அவதானிக்கப்பட்டு சீர்செய்யப்படுகின்றன. உதாரணமாக சினைப்பருவ வேட்கையை காட்டும் மாடுகள், அதிகம் நடக்கின்றன. மாடுகள் ஒன்றையொன்று தாவும். இவை துல்லியமாக அவதானிக்கப்படுகின்றன.

GPS தொழில்நுட்பம் மூலம் மேய்ச்சல் தரைகளில் மேயும் கால்நடைகள் அவதானிக்கப்படுகின்றன. இதனால் அவை பொருத்தமற்ற இடத்துக்கு செல்லாமலும் தொலைந்து போகாமலும் பாதுகாக்கப்படுகின்றன. இந்தத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி யானைகளின் நடத்தைகளும் அவதானிக்கப்படுகின்றன. நாய்களுக்கு மைக்ரோசிப் செலுத்தி விடுவது மூலம், அவை தொலைந்து போகாமல் பாதுகாக்கப்படுகின்றன.

### 6. சூழலியல் மற்றும் காலநிலையை வினைத்திறனாகப் பயன்படுத்தல் :

முன்னரே விளக்கியது போல சாதகமற்ற காலநிலைகள் கணிக்கப்பட்டு பாதுகாப்பு முன்னெச்சரிகை நடவடிக்கைகள் செய்யப்படுகின்றன. தண்ணீர் வினைத்திறனாக பாவிக்கப்படுகிறது. சூழலுக்கு விடுவிக்கப்படும் பண்ணைக் கழிவுகள் பொருத்தமாக நிர்வகிக்கப்படுகின்றன. அண்மைக் காலத்தில் பண்ணைகளிலிருந்து வெளியேறும் மெதேன் எனும் பச்சை வீட்டு வாயுவையும் கணிக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. மெதேனின் அளவைக் குறைக்கும் விதமான முகாமைத்துவத்தை இதன் மூலம் சீர்செய்ய முடிகிறது. பண்ணையின் சாரீரப்பதன், வெப்பநிலை மற்றும் ஏனைய சூழலியல் காரணிகளில் ஏற்படும் மாற்றங்கள் உணரப்பட்டு தானியங்கி இயந்திரங்கள் செயற்பட்டு (மின் விசிறி, fogging) சூழல் சரி செய்யப்படுகிறது. இது மாடுகளின் நலனுக்கு உகந்ததாகும்.

### 7. விநியோகம் கட்டமைப்பைச் சிறப்பாகச் செயற்படுத்தல் :

பால் மற்றும் பால் உற்பத்திகளை விநியோகம் செய்யும் தானியங்கி முறைகள் செயற்கை நுண்ணறிவால் கட்டுப்படுத்தப்படுகின்றன. பாற் கறவை இயந்திரங்களால் கறக்கப்படும் பால் நேரடியாகவே பால் பதனிடல் நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு மனிதத் தலையீடு குறைக்கப்பட்டு, பால் பழுதடைதல் கணிசமாகத் தவிர்க்கப்படுகிறது. பாலுற்பத்திகளும் விநியோகஸ்தர்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படுகின்றன.

### 8. பண்ணைச் செயற்பாடுகள் :

பண்ணைகளின் கொள்வனவு, விற்பனைக் கணக்கு விடயங்கள், இருப்பு விபரங்கள், மாடுகளின் விபரங்கள், சக்தி வழங்கல் விபரங்கள், தொழிலாளர் விடயங்கள், உணவு வழங்கல் மற்றும் கழிவகற்றல் விடயங்கள், பண்ணையின் வெப்பநிலை – சாரீரப்பதன் அவதானிப்பு என சகல விடயங்களும் செயற்கை நுண்ணறிவால் நிர்வகிக்கப்படுகின்றன. இதன் மூலம் தேவையற்ற சக்தி விரயம் தவிர்க்கப்படுகிறது. செலவு குறைக்கப்படுகிறது. ஊழியர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. இதனால் மொத்தப் பண்ணைச் செயன்முறையும் வினைத்திறனாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

### 9. விலங்குக் கொள்வனவு :

நடைமுறையில் வயதான மற்றும் உற்பத்தி குறைந்த மாடுகளை வெளித்தோற்றத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யும் பண்ணையாளர்கள் ஏமாற்றப்படுகின்றனர். வயது, பாலுற்பத்தி, பெற்றோர் – பிள்ளைகள் விபரங்கள், சிகிச்சை விபரங்கள் என சகல விடயங்களும் தரவேற்றப்பட்ட மாடுகளைக் கொள்வனவு செய்யும் போது ஏமாற்றம் தவிர்க்கப்படுகிறது. விற்பனையும் இலகுவாகிறது.

இப்படியாக, பல வழிகளில் செயற்கை நுண்ணறிவானது கறவை மாட்டுப் பண்ணைகளில் செயற்படுகிறது. எனினும் இவை அனைத்தும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. அதுவும் இலங்கை போன்ற நாடுகளில் மிகவும் குறைந்த பாவனையிலேயே உள்ளன. சகல இடங்களிலும் இணைய மற்றும் ஏனைய தொழில்நுட்ப வசதிகள் ஏற்படவில்லை. அதற்குரிய கருவிகள் விலை அதிகமாகவும், கிடைப்பது அரிதாகவும் உள்ளது. பலருக்கு அவற்றை இயக்கும் நுட்பம் தெரியாது. இது தொடர்பாக அதிகாரிகள் மட்டத்திலேயே விழிப்புணர்வு கிடையாது. மேலும் இலங்கையிலுள்ள பண்ணைகள் தொடர்பான விபரங்களின் பதிவுகள் சரிவரப் பேணப்படுவதில்லை; மேம்படுத்தப்படுவதில்லை. இலங்கையில் இது தொடர்பாக, துறை சார்ந்தவர்கள் ஆராய வேண்டும். வினைத்திறனான கால்நடை வளர்ப்புக்கு, செயற்கை நுண்ணறிவு அவசியமானதாகும். இதனைப் பயன்படுத்தி கறவை மாட்டுப் பண்ணைகளை அடுத்த பரிமாணத்துக்குக் கொண்டு செல்ல முடியும்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி :+94(77)2034807 +94 (77) 776 9751

# இலங்கையின் 79ஆவது வரவு – செலவுத் திட்டம்

சுதந்திர இலங்கையின் 79ஆவது வரவு – செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க திங்கட்கிழமை (17) பாராளுமன்றத்தில் முன்வைத்திருக்கிறார்.

2025 ஆம் ஆண்டு 5% பொருளாதார வளர்ச்சியை அடைவது பிரதான இலக்காகும்என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். மட்டுப்படுத்தப்பட்ட வகையில் தான் இம்முறை வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2025–ஆம் ஆண்டுக்கான வருமானமாக 4,990 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை, செலவாக 7,190 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையாக 2,200 பில்லியன் ரூபா காணப்படுகின்றது.

அதேசமயம் அரச நலன்புரி திட்டங்கள் மற்றும் பொதுத்துறை செலவினங் களுக்கான கடந்த நிதிநிலை அறிக்கை யோடு ஒப்பிடும் போது தோராயமாக 130 பில்லியன் அதிகரிப்பை செய்துள்ளது இந்த ஆழும் தரப்பு சம்பளம் ஊதியங்கள் மற்றும் வட்டி செலுத்துதல் உள்ளிட்ட தொடர்ச்சியான செலவுகள் மொத்த செலவினங்களில்ஒரு பெரிய பகுதியாகவே உள்ளன.

தற்போதைய ஆளும் தரப்பு தன்னளவில் சில சவால்கள் மற்றும் தடைகளை கொண்ட ஒரு துணிச்சலான நிதிநிலை அறிக்கை தாக்கல்செய்துள்ளது . அதில் வடக்கு கிழக்கின் மீதும் சில கவனங்கள் செலுத்தப்பட்டுள்ளன .ஒரு சில திட்டங்கள் தவிர மற்றவை எல்லாம் முன்மொழிவுகள் என்பது அவற்றின் மீது நிச்சயமற்ற தன்மையை உருவாக்குகின்றது. ஆனாலும் ஆளும் தரப்பின் இந்த புதிய திட்டத்தின் மூலம் மக்களின் பொருளாதார நிலை மேம்படுமானால் மிகவும் மகிழ்ச்சி

# புதிய ஆளும் கட்சியினரின் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் நிதி அறிக்கை நிலவரம் எப்படி இருக்கிறது?

செ. கருணாகரன்– கிளிநொச்சி

சில பொருளாதார வல்லுனர்களின் கூற்றுப்படி, ஒட்டுமொத்த எண்களின் அடிப்படையில் இந்த நிதி அறிக்கை சர்வதேச நாணய நிதியத்தின் நியமங்களுக்குள் பொருந்தி போகிறது எனவே நாணய நிதியிடம் இருந்து ஆளும் திறப்பு தொடர்ந்து உதவிகளை பெற முடியும் அதற்கு தடைகள் ஏதும் இருக்காது என்று தோன்றுகிறது .

எது எப்படி இருந்தாலும் ஆளும் தரப்பு சில சவால்கள் மற்றும் தடைகளை கொண்ட ஒரு துணிச்சலான நிதி நிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறது . ஆனாலும் அவற்றில் பல விடயங்கள் தொடர்பாக முன்மொழிவுகளாக இருக்கின்றபோது அவற்றின் மீது சில நிச்சயமற்ற தன்மையும் உருவாகின்றது. எது எப்படி இருந்தாலும் ஆளும் தரப்பின் இந்தத் திட்டம் மூலம் நாடு வளர்ச்சி பாதையில் பயணிக்கும் என்று எதிர்பார்ப்போம்.











**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 225,100.00 ரூபா.**

**24 கரட் தங்கம் 245,750.00 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி -** எவ்வளவு உழைத்தாலும் செலவுகள் அதிகமாக வருகின்றதே? இந்த நிலையில் வரவுக்குள் எவ்வாறு செலவு-களை வைத்துக்கொள்வது?

**கயல்வழி கண்ணன்**
**வவுனியா**

**பதில் -** அதிகரிக்கும் வருமானத்துக்கு ஏற்ப, ஒருவரது செலவுகளும் தொடர்ந்து அதிகரிக்கும் என்கிறார், பொருளாதார நிபுணரான பார்கின்சன். இன்னும் சொல்லப்போனால், "ஒருவர் எவ்வளவு பணம் சம்பாதிக் கிறாரோ அதைவிட சற்று 'திகமாகவே அவர் செலவழிப்பார்" என்கிறார் அவர்.

உளவியல் ரீதியாக பார்க்கையில், இது சராசரி மனிதர்களின் மனோபாவம். இதைக் கடப்பவர்களே பணக்காரர்கள் ஆகிறார்கள்.

இதற்கானசிலஉத்திகளையும்பொருளாதார நிபுணர்கள் முன்வைத்துள்ளார்கள்.

வருமானம் அதிகரிக்கும்போது வருமானத்தில், 50மூ மட்டுமே தன்னுடைய பணம் என எண்ணி பணக்காரர்கள் செலவழிக்கிறார்கள். மீதமுள்ள 50மூ பணத்தை, அது தன்னுடைய பணம் அல்ல என்ற சிந்தனையோடு அதை எதிர்காலத்துக்காக சேமிக்கிறார்கள் என்கிறார், பிரையன் ட்ரேசி என்கிற தன்முனைப்பு எழுத்தாளர். பணக்காரர்கள் வங்கிகளுக்கு சேமிப்புக்கும், ஸ்டாண்டிங் இன்ஸ்டிரக்ஷன் (ளுவயனெiபெ ஐளெவசரஉவழைn) கொடுத்து விடுகிறார்கள். தானாகவே சேமிப்புக்கு சென்றுவிடும். இதனால் ஒவ்வொரு மாதமும், சேமிக்கலாமா, வேண்டாமா என்று சிந்திக்க வேண்டிய அவசியம் கிடையாது.

பணக்காரர்கள் எந்தப் பொருளை வாங்கும் போதும் பேரம் பேசத் தவறுவதில்லை. பேரம் பேசுவதால் தங்கள் மதிப்பு குறைந்துவிடும் என்று எண்ணுவதும் இல்லை. மேலும் அதிக விலை உள்ள பொருள் வாங்குவதையும் அவர்கள் தவிர்க்கவே விரும்புகிறார்கள். துணிகள் முதல் வாகனங்கள் வரை எல்லாப் பொருள்களிலும் மிகக் குறைந்த விலை, நடுத்தர விலை, சற்று உயர்வான விலை, மிக அதிக விலை என்ற நான்கு வகையான விலைகள் உள்ளன. பணக்காரர்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது விலையில் உள்ள பொருள்களை மட்டுமே வாங்குகிறார்கள். மேலும் தேவையற்ற பொருட்களை அவர்கள் வாங்குவதில்லை.

தவணை முறை என்கிற சித்தாந்தம் வந்தாலும் வந்தது. செல்போன், வாகனம், வீடு என அனைத்தையும் தவணை முறையில் வாங்கும் பழக்கம் நம்மிடம் வந்துவிட்டது. வருமானம் தரக்கூடிய அல்லது செலவைக் குறைக்கக்கூடிய எந்தப் பொருளையும் தவணை முறையில் வாங்குவதில் தவறில்லை. ஏனென்றால் அவற்றின் மூலம் கிடைக்கிற கூடுதல் தொகையை வைத்து நாம் வட்டியைக் கட்டி, கடனை அடைத்து விடலாம். ஆனால் வருமானம் தராத எந்த பொருளையும் நாம் கடனில் வாங்குவது என்பது நமக்கான கூடுதல் செலவையே ஏற்படுத்தும்.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94(77)2034807**
**+94 (77) 776 9751**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 550/= |
| உருளைக்கிழங்கு | 80/= |
| பச்சை மிளகாய் | 1350/= |
| தக்காளி | 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | 250/= |
| கோவா | 350/= |
| கரட் | 700/= |
| வாழைக்காய் | 200/= |
| சின்ன வெங்காயம் | 320/= |
| பாகற்காய் | 485/= |
| வெண்டிக்காய் | 230/= |
| பயற்றங்காய் | 240/= |
| பீற்றூட் | 580/= |
| முருங்கைக்காய் | 900/= |
| தேங்காய் | 155/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 182/= |
| கனடா டொலர் - | 204/= |
| சீன யுவான் - | 37/= |
| யுரோ - | 303/= |
| ஜப்பான் யென் - | 1.8/= |
| சிங்கப்பூர்டொலர் - | 215/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 347/= |
| சுவிஸ் பிராங் - | 319/= |
| அமெரிக்க டொலர் - | 291/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 192/= |
| கனடா டொலர் - | 212/= |
| சீன யுவான் - | 42/= |
| யுரோ - | 315/= |
| ஜப்பான் யென் - | 1.9/= |
| சிங்கப்பூர் டொலர் | 225/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 368= |
| சுவிஸ் பிராங் - | 334/= |
| அமெரிக்க டொலர் - | 300/= |

# வணிகம் ஆரம்பிக்க அவசியமான நான்கு தூண்கள்

கணபதிப்பிள்ளை ரூபன்




திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.

'வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை

ஆராய்வான் செய்கவினை'–திருக்குறள் (512)–

மு.வரதராசனார் விளக்கம்: பொருள் வரும் வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்கவல்லவனே செயல் செய்ய வேண்டும்.

எமது பரம்பரைத் தமிழர்களின் வரலாற்றை பார்த்தோமென்றால் அவர்கள் கடலோடி மலையேறி (இப்போது விமானம் ஏறி) நாடுகள் கடந்து தமக்கும், தமது குடும்பத்திற்கும், அதனுடன் அவர்களது சமூகத்திற்கும் பணம் உழைக்க மிக்க சிரமப்பட்டு அவர்களது குறிக்கோள்களை அடைந்தார்கள். அதன்படி பார்க்கும்போது முன்னைய அரச காலங்களில் உலகத்தில் கிழக்கு மேற்கு நாடுகள் என்று அவர்கள் போகாத நாடுகள் இல்லை. பின்பு ஈழத்தில் வாழும் தமிழரைப்பார்த்தால், அவர்கள் இலங்கையின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை செய்திருக்கின்றார்கள், செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்குள், யாழ்ப்பாணத்து முதாதையினரை ஆராய்ந்தால் அவர்கள் எனது ஊரான வடக்கின் முனையான பருத்தித்துறையிலிருந்து தெற்கில் காலி மற்றும் மாத்தறை வரை சென்று வியாபாரம் செய்து வளத்தை பெருக்கினார்கள்.

எமது நாட்டின் போரின் காரணத்தாலும், பொருளாதார சிக்கலாலும் கடந்த நாற்பது ஆண்டு காலமாக எமது ஈழத்தமிழ் மக்கள் உலகமெல்லாம் பரவி வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் பலர் மிக்க நன்றாக தொழில் செய்து கோடீஸ்வரர்களாக மாறி இருக்கிறார்கள். உதாரணமாக, இன்றைய சிங்கப்பூரின் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினம் ஓர் ஈழத்தமிழ் பரம்பரையைச் சேர்ந்தவர் ஆவார்.

இன்னொரு உதாரணம், இந்தியாவின் மிகப்பெரிய திரைப்படமான பொன்னியின் செல்வன் படத்தைத் தயாரித்தவர் ஈழத்திலிருந்து ஐரோப்பாவுக்கு புலம்பெயர்ந்த தமிழ் தொழிலதிபர் சுபாஸ்கரன். அப்படி எத்தனையோ உதாரணங்களை முன்வைக்க முடியும். இவர்கள் போலவே நானும் எனது பயணத்தை, யாழ் குடாநாட்டின் ஓர் கிராமமான புலோலியில் பிறந்ததிலிருந்து ஆரம்பித்து, உள்நாட்டு போரின் போது ஆபிரிக்காவினூடாக ஐக்கிய அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்து, படித்து, அதன் பின் உலகப்பிரபலமான சிலிக்கன் பள்ளத்தாக்கில் ஓர் வெற்றிகரமான தொடர் தொழில் முயற்சியாளராக ஆகியிருக்கிறேன். ஆரம்ப வியாபார தொழில்களில் (Startups) வெற்றி பெற நிறைய அதிஸ்டம் தேவை. அதிஸ்டத்தை கொண்டுவர சில செயல்களை திட்டமிட்டுச் செய்ய வேண்டும். அவற்றில் நான்கு விடயங்களை இங்கு கூறுகிறேன்.

1. மக்கள்/குழு (People): ஓர் பிரமாண்டமான செயலையோ பொருளையோ உருவாக்குவதற்கு முதலாவது தேவையானது ஒரே மனப்பான்மை கொண்ட குழுவினர். முதலில் பிரதான குழு (Core Team) ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அந்த குழுவில் வணிக நுட்பம் கொண்ட ஒருவரும், தொழிநுட்பம் நன்றாக தெரிந்த ஒருவரும், அதற்குப் பின் வணிகத் தேவையையும் தொழில்நுட்ப அறிவையும் வைத்து வாடிக்கையாளர்கள் பணம் கொடுத்து வாங்கக் கூடிய பொருட்களை வடிவமைத்து உருவாக்க கூடியவர்களும் தேவை. பின்பு குழுவை மேலும் உறுதிப்படுத்த தொழில் அறிவும் மன அமைப்பும் கொண்ட உறுப்பினர்களை சேர்ப்பது மிகவும் முக்கியம்.

எனது அனுபவத்தில், எனது இரண்டு நிறுவனத்திலும் சிறந்த ஆரம்ப குழுவினரும், அதன் பின் வேலைக்குச்

சேர்த்த பிரதான குழுவினரும் வெற்றிக்கு முக்கியமான காரணமாக இருந்தார்கள். அவர்கள் பல வித்தியாசமான வாழ்க்கை பின்னணியிலிருந்து வந்ததால் அதை எங்களது வலிமையாகப் பாவித்தோம். இதைப்பற்றி நான் முன்னர் ஓர் கட்டுரையில் 'பன்முகத்தன்மை' என்று எழுதியிருக்கிறேன். அதற்கு உதாரணங்களாக பின்வருவனவற்றைச் சொல்லலாம். ஒருவர் வியட்னாம் போரின் போது ஐக்கிய அமெரிக்காவுக்கு அகதியாக வந்து பின் பெரிய பல்கலைகழகத்தில் பொறியியல் படித்தவர். இன்னொருவர் தாய்வானிலிருந்து கனடாவுக்கு வந்து அமெரிக்காவுக்கு வந்தவர். மற்றவர் லெபனானிலிருந்து புலம்பெயர்ந்தவர். சிலரின் பெற்றோர் ஈழத்திலிருந்து பல நாடுகளுக்குப் போய் கடைசியாக அமெரிக்காவில் குடியேறியவர்கள். இவர்களது பன்முகத்தன்மையான ஆற்றல், பிரச்சனைகளுக்கு முடிவு கூறும் முறை எனக்கு மிகவும் உதவியாக இருந்தது.

2. கூட்டுவணிகம் (Partnership): தொழில்நுட்ப நிறுவனங்களை ஆரம்பிப்பதற்கு ஆலோசனைகளோடு வருவது சுலபம். ஆனால் அப்படியான ஆலோசனைகளால் உருவாக்கப்படும் பொருட்களை பாவனையாளர்களும் வாடிக்கையாளர்களும் காசு கொடுத்து வாங்குவார்களா என்பதை ஆராய்ந்து தொழில் நிறுவனங்களை ஆரம்பிப்பது முக்கியம். வாடிக்கையாளர்களின் பிரச்சனைகளையும், அதனை தீர்க்கும் முறைகளையும் ஆரம்பத்திலேயே அறிந்து பல பிழைகளைத் தவிர்ப்பதற்கு கூட்டுவணிகம் உதவுகிறது. இப்படிக் கூடிச் செய்வதன் மூலம் வாடிக்கையாளருடன் தொடர்புகளை அதிகரிப்பது மட்டுமன்றி, அவர்களிடமிருந்து சூழல், சந்தைமாற்றங்களை ஆரம்பத்திலேயே அறிந்து அதற்கேற்ப பொருட்களை உருவாக்க முடியும்.

எனது இரண்டாவது நிறுவனத்தில் சில முக்கிய உலகளாவிய நிறுவனங்களிலிருந்து முதலீடுகளை எடுத்திருந்ததை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். எமது நிறுவனத்தின் பொருட்கள் நன்றாக இருந்தாலும் அப்பொருளை அந்த நிறுவனத்தின் மற்றைய பொருட்களோடு சேர்த்து விற்க சில மாற்றங்கள் தேவைப்பட்டன. அவர்களுடன் பொருட்களை சேர்த்து உருவாக்கியதால் அவர்களுக்கும் அந்த பொருளின் வெற்றியில் பங்கிருந்தது. அதன்படி அனைவருக்கும் வெற்றி (நிஷ்ஜ–நிஷ்ஜ) நிலைமை உருவாக்குவதன் மூலம் கூட்டாக எல்லோரும் வெற்றி பெற முடிந்தது.

3. உற்பத்தி (Product): உற்பத்தியைச் செய்ய முக்கியமாக மூன்று விடயங்கள் நன்றாக அமைய வேண்டும். ஆக்கப்படும் உற்பத்திகள் பற்றிய அடிப்படை அறிவு, அதன் விளைவுகள் பற்றி நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அதை கல்வியின் மூலமும், அதில் வேலை செய்த அனுபவத்தின் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும். அதன் பின் வாடிக்கையாளர்களுடன் பேசுவதன் மூலம் அவர்களது தேவையை அறிந்து கொள்ளலாம். ஆரம்பத்திலிருந்தே வாடிக்கையாளர்களுடன் உரையாடுவதன் மூலம் தேவையில்லாத பிழைகளை முன்கூட்டியே தவிர்க்க முடியும். கடைசியாக குழுவினர்களைச் சேர்க்கும் போது இப்படியான உற்பத்திகளை செய்யக்கூடிய ஆற்றலும், அனுபவமும், மனப்பான்மையும் உள்ளவர்களை அணியில் சேர்க்க வேண்டும்.

எனது ஓர் நிறுவனத்தில், ஆரம்பத்தில் உருவாக்கிய உற்பத்திகள் தேவையான நல்ல அம்சங்களைக் கொண்டிருந்தபோதும் அதில் சில குறைகளும் இருந்தன. அக்குறைகளை நிவர்த்தி செய்வது எமது உற்பத்திகளுக்கு அவசியமானதாக இல்லாவிட்டாலும், எமது வாடிக்கையாளர்களுக்கு அது அவசியமானதாக இருந்தது. ஆகவே, சில மாற்றங்களைச் செய்ததன் மூலம், அவர்களிடம் ஏற்கனவே இருந்த உற்பத்திகளுடன் எமது உற்பத்திகளையும் இணைத்து இலகுவாக வேலை செய்யக்கூடியதாக இருந்தது. அதனால் அவர்கள் மகிழ்ச்சியும் அடைந்தார்கள். கோடிக்கணக்கான பணத்திற்கு அந்த உற்பத்திகளை விற்க உதவியும் செய்தார்கள்.

4. செயல்முறை (Process): ஆரம்ப தொழில்நுட்ப நிறுவனங்களை உருவாக்குவதற்கு சிறந்த குழு இருக்கலாம். பொருட்களை வாங்க வாடிக்கையாளர் இருக்கலாம். திறமையான நுணுக்கத்துடன் தொழில்நுட்பமும் இருக்கலாம். ஆனால் இறுதியில், திட்டமிட்டபடியே உரிய காலகட்டத்தில், வாடிக்கையாளர்களை திருப்திப்படுத்தும் உற்பத்திகளை கொடுப்பது தான் வியாபாரத்தை மேம்படுத்த வைக்கும். அப்படி, மேம்படுத்த தேவையானதுதான் செயல்முறை. செயல்முறை என்பது, ஆரம்பத்திலிருந்தே திட்டமிட்டு, பொருட்கள் ஒவ்வொரு நிலையிலும் எவ்வாறு தேவைப்படும் என கவனித்து, அதற்கு தேவையான வளங்கள், கருவிகளை அணிக்குக் கொடுத்து, சொன்ன நேரத்திற்கு பணிகளை முடிப்பது ஆகும். ஸ

எனது அனுபவத்தில் ஓர் வெற்றியான நிறுவனத்திற்கும் வெற்றி பெறாத நிறுவனத்திற்கும் உற்பத்தி செய்யும் வழிமுறைதான் பிரதான வித்தியாசம். செய்ய இருக்கும் பணிகளை சிறிய பங்குகளாகப் பிரித்து, அவற்றை செய்யும் காலங்களைக் கணித்து, அதற்கான முடிவுப் பெறுபேறுகளை தெளிவாகப் புரிந்து, தொடர்ந்து கவனிக்க வேண்டும். இது, இடையில் வரும் சிக்கல்களை முன்னரே அறிந்து, அதற்கான திருத்தங்களைச் செய்து, தேவையில்லாத காலதாமதங்களை தவிர்க்க வழிசெய்கிறது. இதனால் வாடிக்கையாளர் திருப்தியடைவர். வருமானம் கிடைக்க தாமதமும் ஏற்படாது.

What are the key components of a successful business




வணிகத்தை ஆரம்பிப்பதென்பது ஓர் சுலபமான வேலை இல்லை. அதன் பாதையில் செல்லத் தொடங்குவதற்கு, தகுந்த மனப்பாங்கும் மனவுறுதியும் தேவை. பின்னர், மேலே கூறியிருக்கும் நான்கு விடயங்களான குழு, கூட்டுவணிகம், உற்பத்தி, செயல்முறை என்பவற்றை திட்டமிட்டு அனுசரிப்பதன் மூலம் எதிர்பாராத இழப்புக்களைத் தவிர்க்கலாம். அதன் மூலம் வணிகத்தை வெற்றிகரமாகக் கட்டியெழுப்பலாம்.

நான் மேலே கூறியவாறு, எனது தாயின் தந்தையார் வடக்கிலிருந்து தெற்கிற்குச் சென்று கடை வைத்து, பல விவசாயப் பொருட்களை யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கிற்கு அனுப்பினார். இப்படி ஆயிரக்கணக்கான தமிழ் வர்த்தகர்கள் பணம் உழைத்தார்கள். அவர்கள் காலத்தையும், அதைச் சுற்றிய பிரச்சனைகளையும் ஆராய்ந்து வணிகத்தைச் செய்தார்கள். நான் அறிந்தபடி, அக்காலத்தில் கிராமத்தில் பலருடன் சேர்ந்து குழுவாக வணிகம் தொடங்குவார்கள். அதை வாங்கக்கூடிய வாடிக்கையாளர்களுடன் நட்பு வைத்திருப்பார்கள்; திட்டமிடுவார்கள். வாடிக்கையாளர்களுடைய தேவைகளை அறிந்து, உற்பத்திகளை விவசாயம் மூலமோ அல்லது சிறு கைத்தறி நிலையத்திலோ உருவாக்குவார்கள். கவனமாகச் சிந்தித்துப் பார்த்தால், நான் மேலே கூறிய நான்கு தூண்களையும் பின்பற்றியே இவர்கள் வணிகம் செய்திருக்கிறார்கள் என்பது புலப்படும். அதையே நான் ஐக்கிய அமெரிக்காவிலும் பின்பற்றி வெற்றிபெற்றேன் என்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தொடரும்.

இங்கே பூசைமுறைகள் மடைப்பண்டம் எடுத்தல், மடை பரவுதல,; ஊருக்கு விளக்கு வைத்தல், வழுந்து நேர்தல் என்று நடக்கும். வழமையான காவடி கரகம் பாற்செம்பு எடுத்தலும் பறை முழக்கமும் பறைமுழக்கத்துக்கு ஏற்ப பூசகர், பொதுமக்கள் கலையாடுதல் என்பனவும் விமரிசையாக நடக்கும். ஒவ்வொரு கோயில்களிலும் கோயிலுக்கான உரித்தாளர்கள் இருப்பர். அன்னதானம் செய்ய ஒரு சாரார்;, நேர்த்திக்கு வரும் கோழி ஆடு மாடுகளை ஏலம்போட்டு விற்பது ஒரு சாரார். கடைகளை குத்தகை விடுவோர் ஒரு சாரார் என பங்கிட்டு நடத்துவார்கள்.

# வாழ்வும் வளமும்

## பார்வை



எழுத்தாளர் -தமிழ்க்கவி

ஆச்சுடா சாமி 'தையும்பிறக்க தையடா பொக்கணத்தை' என்று அந்தக்காலத்தில் சொல்வார்கள். தைமாதம் பிறந்தால் அறுவடைக்காலம் தொடங்கும். அதன்பிறகுதான் விவசாயிகளுக்கு ஓய்வு. வருமானமும் வந்திருக்கும்.

எனவே கோயில்களும் விழாக்காணும். தை பூசம் மாசிமகம் சிவராத்திரி ஏன் கிறிஸ்தவர்களுடைய தவக்காலமும் இந்தக்காலத்துள்தான் வரும். பங்குனி உத்தரம் என்று ஆரம்பித்து புளியம் பொக்கணை, வற்றாப்பளை புதூர் மடுமாதா, என திருவிழாக்கள் பிசு;சுப் புடுங்கும்.

தேர் தீர்த்தம் திருவிழா. என்ற வகையில் கோயில்களில் பிராமணர்கள் வந்தபின் தொடங்கிய திருவிழா போலல்லாது இன்றும் தேர் இல்லாமல் பொங்கல் குளிர்ச்சி என்று நடக்கும் திருவிழாக்களும்

வன்னிக்கோவில்களில் அதிகம் இவையெல்லாம் அந்ததந்த ஊரிலேயே வசிக்கும் சைவ வேளாளரால் பூசை செய்யப்படும் கோவில்கள்.

இங்கே பூசைமுறைகள் மடைப்பண்டம் எடுத்தல், மடை பரவுதல,; ஊருக்கு விளக்கு வைத்தல், வழுந்து நேர்தல் என்று நடக்கும். வழமையான காவடி கரகம் பாற்செம்பு எடுத்தலும் பறை முழக்கமும் பறைமுழக்கத்துக்கு ஏற்ப பூசகர், பொதுமக்கள் கலையாடுதல் என்பனவும் விமரிசையாக நடக்கும். ஒவ்வொருகோயில்களிலும்கோயிலுக்கான உரித்தாளர்கள் இருப்பர். அன்னதானம் செய்ய ஒரு சாரார்;, நேர்த்திக்கு வரும் கோழி ஆடு மாடுகளை ஏலம்போட்டு விற்பது ஒரு சாரார். கடைகளை குத்தகை விடுவோர் ஒரு சாரார் என பங்கிட்டு நடத்துவார்கள்.

அண்ணன் தம்பி மாமன் மச்சான் சகலைசம்பந்திபேரர்கள்எனஉறவினர்களும் உற்றாரும் கூடிச் சமைப்பதே ஒரு பெரும் கண் கொள்ளாக்காட்சி மலை போல குவிந்திருக்கும் பூசணிக்காய்களை 'புஷ்ளந உழஅந மஜகைந'அதாவது கொடு வா கத்தி கொண்டு கொத்திப்போட ஆண்கள். அதை துளாக வெட்ட பெண்கள் கூடியிருப்பர். கிராமங்களில் தென்னைமட்டை போட்டுத்துளாவிசோறுபதும்பார்க்க, முன்னர் ஒருபோதும் அடுப்படிக்கே போயிராத, நடுத்தரவயதில் இளமைபெயர வேர்த்து நிற்கும்வாலிபங்கள்மேற்சட்டையணியாமல் தமது தேகக்கட்டை(சை) விளம்பரம் செய்து பெருமைப்படுவர். பாய் விரித்து பரவிய சோற்றில் சவள்போட்டு சாதம் அள்ளும் வளம்நிறைந்தகோவில்கள் இதற்குப்பாயிரம் பாட யாரும் முன்வரவில்லை. நளனுடைய நிடத நாட்டிலே அரிசிகழுவிய நீர் பாய்ந்து நெல்விளைந்ததாம் நம்மநாடு குறைச்சலா என்ன.

நாலுபத்து ஊரில் திருமண பந்தங்களில் இணைந்து பிரிந்து போன உறவுகளெல்லாம் இப்போதுதான் இங்கே கூடிநிற்கும். அரை டிக்கற்றுகளெல்லாம் பட்டுப்பாவாடை சரசரக்க ஓடித்திரிய, பெரிசுகள் அவர்களை விரட்டுவதே குறியாக நிற்பர். குழந்தைகளின் குதூகலமானது எப்படிப்பட்ட பெரியவர்களையும் தமது இளமைக்காலத்துக்கு எடுத்துச்செல்லும். மௌ;ள காய்கறி வெட்டு ஓதுங்க, சாய்ப்புக்கடைகளை சல்லடைபோட புறப்படும் பெண்கள் வாய்ப்பாக ஒரு கிழவியை தம்முடன் அழைத்துக் கொள்வர்,

'ணேய் வாணை ரெண்டு தூக்குச்சட்டி வாங்குவம்'

ஆனா அந்தக்கிழவி என்னவோ உப்புக்கு சப்பாணியாக பின்னால்போகும.; பெண்களோ தமக்கேற்ற சோடிகளை முன்னே நடக்கவிட்டு பின்னே நடப்பதை கிழவி அறிந்தாலும், எதுவும் பேசமாட்டாள.; இணைந்து கொள்வாள். இப்படி நடக்கும் கடைத்தெரு வியாபாரத்தில் அடுத்தவருடம் குழந்தையோடு வரப்போகும் சோடிகளும் அடக்கம். திரும்பும் பக்கமெல்லாம் 'ப்பாய்ய்ங்'ப்பாய்ய்ய்ங்' என்ற குழல்களும்

அம்மம்மாக்குழலும். விசிலும் காது வெடிக்கும். ஆடித்திரிந்து அடக்கமாக, பாய் ஒன்றை வாங்கி ஏற்ற இடத்தில் விரித்து விட்டு, அதில் ஆண்பெண் பேதமின்றி உறங்குவது போல பாவனை செய்து, மனதுதுக்கினியாரை அருகிருத்தி ரசிப்பவரும,; இவையெல்லாவற்றுக்கும் இடையே கோயிலடிக்குப்போய் ஒருபிடி புற்கை அடிபட்டு வாங்கிவந்த பெருமையை பங்கிடுவோருமாக திரு விழாக்கள் களைகட்டும் .

இந்தவாரம் புளியம் பொக்கணை திருவிழா பாரம்பரிய வழக்கமாக கூடார வண்டில்கட்டி மாடுபூட்டி மீசாலைக்குப் போய் மடைப்பண்டம் எடுக்கும் சடங்கு நடைபெறுகிறது. மடைப்பண்டங்களாக பலாப்பழங்கள், மாம்பழங்கள் பச்சரிசி, தேங்காய் பால் தயிர் நெய் இன்னும் ஏராளமான பொருட்கள் வரும் வற்றாப்பளைக்கும் இதேபோல நடக்கும். இவையெல்லாவற்றையும் ஊடறுத்து காவடியாட்டம.;காதுவெடிக்கும்பறையொலி. இடைக்கிடையே தூக்குக்காவடி.என அவை ஒரு புறம் நடக்கும்.

அதிகாலையில் வந்தவர்கள் தத்தமது ஊருக்கு வண்டியேறுவர். கோவிலடி கோவிலடியாகவே இருக்கும். சாப்பிட்ட எச்சிலிலைகள்கூட ஒதுக்கமாக போட்டிருக்கும். இந்தத் திருவிழா எல்லாம் இப்போது மாறிவிட்டது.

காதுகளில் விடிய விடிய சமஸ்கிருத மொழியில்ஐயர்ஓதுவதுகாதில்அறைகிறது. கடைபரவியிருக்கும்வர்த்தகர்களின்விளம்பர சேவைகள்ஒலிபெருக்கியில்அலறுகின்றன. ஐஸ்கிறீம்வாகனங்களும்தமதுபங்குக்குபாட தேவார திருவாசகங்களும் இடையிடையே காதில்விழும். கூடிச்சமைப்பதும் உண்பதும் மிகவும்சிலரே அன்னதானம்யாருடையதோ அவர் சம்பளத்துக்க ஆள்போட்டு சமைக்கிறார். விடிந்தபின் கோவில்

வளாகம் முழுதும் பொலித்தீன் பைகளும் பிளாஸ்டிக்போத்தல்களும் ஐஸ்கிறீம் கப்புகளும்இடையிடையேவீசப்பட்டுக்கிடக்கும், உணவுப் பொட்டலங்களும் மிதிபட்டு கோரமாக காட்சிதரும.; நேற்று முன்தினம். புனிதப்பிரதேசமாக பிரகடனப்படுத்தி. வருவோரெல்லாம் பயபக்தியோட வந்த இடமா .இது என்று வியக்கத்தோன்றும்.

ஊர்பெயர்ந்தஉறவுகளும்திருவிழாவை நேரிலேயே பார்க்கிறார்கள். சுவாமி நேரிலேதான் தேரிலே வந்தாலும் அவரை கண்களால் பார்ப்பவர்களை விட கமராவில் பார்ப்பவரும் அப்படி வெளிநாடுகளுக்கு அஞ்சல்செய்வோருமே அதிகம். கைகளைத்தூக்கி வணங்கியது அந்தக்காலம் இப்போது கைகளைத்; தூக்கினால் அது கூப்பி கும்பிடவல்ல படம்பிடிக்க. சுவாமியின் உயரத்திலும் பார்க்க கூடிய உயரத்தில் ஏற முடிந்தவரே சிறந்த பார்வையாளராகிறார். கோவிலுக்குப் போகும்போது இருந்தஉற்சாகம்வரும்போது அந்தக்காலத்தில் தியேட்டருக்குப்போய் படம் பார்த்து விட்டு திரும்பி வரும்போது இருக்கும் அதே நிலைதான்.

இந்த விழாக்களிலேதான் சாதி இல்லை. யாரும் வரலாம் நேர்த்தி செய்யலாம் என்றாலும்அவர்களாகவேஒதுங்கியிருக்கும் பண்பையும் காணலாம். உறவுகளில் பெருமளவானோர் வெளிநாடுகளுக்குப் போய்விட்டனா.; சென்ற திருவிழாவோடு பேரப் பிள்ளைகளை பெற்றார் பிடுங்கிச் சென்றுவிட, பேதலித்த மனதோடு கோவிலுக்கே போகாத சின்னம்மாக்கா. நேந்து விட்ட கோழிச்சேவலை பக்கத்து வீட்டுக்காறரிடம் கொடுத்து அனுப்பிவிட்டா. புண்ணிய மூர்த்தியரும் இப்ப கோவிலுக்குப் போகவில்லை. ஏன் என்றால் எல்லாம் முடிஞ்சுதம்மாஎன்ரசீவனிருக்குமட்டுந்தானே அங்கால? சந்ததிக்கெண்டுதானே கோயிலக்கட்டி ஆண்டம். அந்த சந்ததியே இப்ப எங்கயோ போட்டுது. எனக்கேன் திருவிழா. இப்படி ஏராளம் புறக்கணிப்புகள் இருந்தாலும் திருவிழாக்கள் நடக்கும் நடக்கின்றன..

ஒருகாலமும் காணாத அளவுக்கு விடலைப்பருவத்து ஆண்பெண்கள் கோவிலடியில் கலக்கிக் கொண்டு திரிவதற்கே வருகிறார்கள். சண்டை நடந்த காலத்தில் இவ்வளவு இளையவர்களை நாம் எந்த திருவிழாவிலும் கண்டதில்லை. வெளிநாடுகளிலிருந்தும் இந்த திருவிழாக்களுக்கென்றே வருவோர் தொகையும் அதிகரித்துள்ளது. அடுத்த படையெடுப்புவற்றாப்பளை,நல்லூர்என்றும் மடுத்திருப்பதி என்றும் காத்திருக்கின்றன. ஒவ்வொருதிருவிழாவிலும்கழுத்துநகைகள் அறுக்கப்படுகின்றன. என்றாலும் அடாது மழை விடாது பெய்தாலும் திருவிழாக்கள் நடக்கும்.அந்ததிருவிழாக்களில்அம்மனுக்கு சாத்தியிருக்கும் புடவை நகைகளை விட என் அம்மணிக்கே அதிகம் சாத்துவேன் என அடம் பிடிக்கும் ஆண்கள் (நல்ல மனிதர்கள்)தமது வீட்டுப்பெண்களை அலங்கரிக்கவே விரும்புகிறார்கள் எல்லாம் திருவிழாவோட செய்தாத்தான்.

'அடியாத்தைஅடிக்கத்திரத்தாதையுங்கோ சரிசரீஆம்பிளையளும்உங்களைப்போலங்' இல்லஇல்ல உங்களைவிட அதிகமாத்தான் நகைபோடுகினம் ஆள விடுங்கப்பா.


# தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்ப்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# இலங்கையில் தங்க முதலீடு மற்றும் பங்குச் சந்தை முதலீடு; சமகால நிலை மற்றும் வாய்ப்புகள்




இலங்கையின் பொருளாதார சூழல் தங்க முதலீட்டிலும் பங்குச் சந்தை முதலீட்டிலும் மக்களிடையே பல்வேறு பார்வைகளை ஏற்படுத்தியுள்ளன. அண்மைய பணவீக்க சவால்கள், நாணய மதிப்பிழப்பு மற்றும் உலகளாவிய பொருளாதார மாற்றங்கள் முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன. இந்த கட்டுரை தங்க முதலீட்டுக்கும் பங்குச் சந்தை முதலீட்டுக்கும் இடையே ஒப்பீடு செய்து எந்த நேரத்தில் எது சிறந்ததாக இருக்கும் என்பதைக் கூறுகிறது.

1) தங்க முதலீடு: இலங்கையில் தங்கம் ஒரு பாரம்பரிய முதலீட்டு மூலதனமாக இருந்து வருகின்றது. குறிப்பாக 24-காரட் தங்கம் பாதுகாப்பான சொத்தாக கருதப்படுகின்றது.

நன்மைகள்:

☛ பணவீக்கம் எதிர்ப்பு: பணவீக்கத்தின் போது தங்கம் மதிப்பு இழக்காமல் பாதுகாக்கும்.

☛ அடித்தள பாதுகாப்பு: பொருளாதார மற்றும் அரசியல் சிக்கல்களில், தங்கம் முதலீட்டாளர்களுக்கு நம்பகமான ஆதரவாக உள்ளது.

☛ உலகளாவிய தேவை: தங்கத்தின் வரையறுக்கப்பட்ட விநியோகத்தால் உலக சந்தையில் அதன் விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

சவால்கள்:

☛ குறைந்த வருவாய்: தங்கத்தில் நீண்டகாலத்தில் சீரான வருவாய் கிடைக்காது.

☛ சேமிப்புசெலவுகள்:பாதுகாப்பானஇடத்தில் தங்கத்தை வைத்திருக்க செலவுகள் ஏற்படும்.

2) பங்குச் சந்தை முதலீடு: இலங்கை பங்குச் சந்தை (CSE) முதலீட்டாளர்களுக்கு அதிக வருமானத்தை வழங்கும் ஒரு சிறந்த தளமாக உள்ளது. குறிப்பாக ஆபத்து சகிப்புத்தன்மையுள்ள முதலீட்டாளர்கள் இதனை விரும்புகின்றார்கள்.

நன்மைகள்:

☛ உயர் வருவாய் வாய்ப்பு: நீண்டகாலத்தில் பங்குகள் தங்கத்தை விட அதிக இலாபத்தை உருவாக்கும்.

☛ பங்கு இலாபங்கள்: பங்கு இலாபம் மற்றும் பங்குகளின் வளர்ச்சியால் கூடுதல் வருவாயைப் பெறலாம்.

சவால்கள்:

அதிக ஆபத்து: சந்தை மாற்றம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பொருளாதார ஏற்ற இறக்கங்களின் காரணமாக முதலீட்டில் ஏற்ற இறக்கங்கள் ஏற்படும்.

சந்தை அறிவு: பங்குச் சந்தையில் முதலீடு செய்ய முன் விஷயங்களை ஆழமாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தங்கம் மற்றும் பங்குச் சந்தை முதலீடு இரண்டும் அவற்றிற்கு உரிய பலன்களையும் சவால்களையும் கொண்டுள்ளன. முதலீட்டாளர்கள் தங்களின் ஆபத்து சகிப்புத்தன்மை, முதலீட்டு இலக்குகள் மற்றும் தற்போதைய சந்தை நிலைமை அடிப்படையில் முதலீட்டு முடிவுகளை எடுக்க வேண்டும்.

தங்கத்தில் முதலீடு: பாதுகாப்பான முதலீட்டினை விரும்புகிறவர்களுக்கு இது சிறந்த தேர்வு. பணவீக்கம் மற்றும் நாணய மதிப்பிழப்பு அதிகரிக்கும் சூழலில் தங்கம் மிகுந்த பாதுகாப்பாக இருக்கும்.

பங்குச் சந்தை முதலீடு: அதிக வருவாயை நாடும் முதலீட்டாளர்களுக்கு இது சிறந்த வழி. சந்தையைப் பற்றிய அறிவும் பொறுமையும் இதற்கு அவசியம்.

**சீரான முதலீட்டு திட்டம்:**

தங்கமும் பங்குகளும் இணைந்த முதலீட்டு திட்டம் (Mixed Portfolio) மூலம், பாதுகாப்பும் வளர்ச்சியும் ஒருங்கே பெறலாம். உதாரணமாக:



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

தங்கத்தில் 40%-50% முதலீடு: பணவீக்கம் மற்றும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு பெறலாம்.

பங்குகளில் 50%-60% முதலீடு: அதிக வருமானம் பெறலாம்..

இலங்கையின் பொருளாதார சூழலைப் பார்த்து, தங்க முதலீடும் பங்குச் சந்தை முதலீடும் முக்கியமான வாய்ப்புகளை வழங்குகின்றன. முதலீட்டாளர்கள் நிதி ஆலோசகரின் உதவியுடன் சரியான முடிவுகளை எடுப்பது அவசியமாகும். இது ஒரே நேரத்தில் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் அளிக்கும்.

**தற்போதைய பொருளாதார சூழலின் தாக்கம்**

இலங்கையின் சமகால பொருளாதார சூழலில் தங்க முதலீடு மற்றும் பங்குச் சந்தை முதலீட்டின் தாக்கம் மிகவும் வித்தியாசமானதாக இருக்கின்றது. 2022-2023 காலகட்டத்தில் அரசியல் மற்றும் பொருளாதார சிக்கல்களால் முதலீட்டாளர்களின் நம்பிக்கை பாதிக்கப்பட்டது.

இதனால்:

தங்கத்தில் அதிக ஆர்வம்: தங்கத்தின் சர்வதேச விலை உயர்வு, இதன் பாதுகாப்பான தன்மை மற்றும் நம்பகத்தன்மையைக் குறிப்பாக பணவீக்கம் அதிகரிக்கும் சூழலில் அதிகரித்தது. தங்க நகைகள் மட்டுமல்லாமல் தங்க பிஸ்கட், தங்ககாசுகள் போன்றவற்றிலும் முதலீட்டாளர்கள் திரளாக ஈடுபட்டனர்.

பங்குச் சந்தையின் ஆவணமும் ஏற்ற இறக்கங்களும்: 2022-2023 காலகட்டத்தில் இலங்கை பங்குச் சந்தை (CSE) முதலீட்டாளர்களுக்கு சிறிய அளவிலேயே நம்பகமானதாக இருந்தது. இது பங்குச் சந்தையின் மாற்றத்தன்மை அதிகமாக இருப்பதாலேயே ஏற்படுகின்றது. சில முன்னணி நிறுவனங்களின் பங்குகள் மட்டுமே முதலீட்டாளர்களை ஈர்த்தன.

### வணிக சமூகத்துக்கான கற்றுக்கொள்ள வேண்டிய கொள்கைகள் / தன்மைகள்

முதலீட்டின் தனித்தன்மை மற்றும் சீரான திட்டம்: வணிகத் தலைவர்களும் சுயமாக முதலீடு செய்ய விரும்புபவர்களும் தங்கத்திலும் பங்குகளிலும் சமமாக முதலீடு செய்வது நிதி இடைவெளி நிலையை நிர்வகிக்க உதவும்.

முதலீட்டின் நிதி ஆதரவு: தங்கத்தில் முதலீடு செய்யும் நிறுவனங்கள் தங்கள் மதிப்பைக் குறிப்பாக வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதற்கான அடிப்படையாகப் பயன்படுத்த முடியும். இது வெற்றிகரமாக உள்ளூர் பொருளாதாரத்தில் நம்பகத்தன்மையை மேம்படுத்தும்.

சர்வதேச சந்தை தொடர்பான தகவல்களைப் பயன்படுத்துதல்: சர்வதேச சந்தையின் நிலைமை மற்றும் தங்கத்தின் விலை மாறுபாடுகளைப் பின்தொடர்ந்து அதற்கிணங்க, இலங்கை முதலீட்டாளர்கள் மிகச்சிறந்த நேரத்தைத் தேர்ந்தெடுக்க முடியும்.

வங்கி மற்றும் நிதி நிறுவனங்களின் பங்கு:

இலங்கையின் வங்கி மற்றும் நிதி அமைப்புகள் பங்குச் சந்தை முதலீட்டின் வளர்ச்சிக்கு மொத்த ஆதரவை வழங்க வேண்டும். தங்க சேமிப்பு திட்டங்கள், ETF/Mutual Funds போன்ற தற்காலிக முதலீட்டு திட்டங்கள் மூலம் முதலீட்டாளர்கள் இடையே விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும்.

### MSME (சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கான) வாய்ப்புகள்:

சிறு வணிகங்கள் தங்க நகை வர்த்தகம் அல்லது தங்க சேமிப்பு திட்டங்களில் ஈடுபடலாம். இதனால் தங்கள் முதலீட்டு அடிப்படை நிலையை கட்டமைக்க முடியும். அதே நேரத்தில், பங்குச் சந்தையின் ஞாஈணநு வாய்ப்புகளைப் பயன்படுத்தி நிறுவன வளர்ச்சிக்கான புதிய வழிகளைத் தேடலாம்.

### ஏற்கனவே முதலீடு செய்தவர்களுக்கான ஆலோசனைகள்:

தங்கத்தை நிகர்த்தி மதிப்பீடு செய்யவும்: தங்கத்தின் நிலையான மதிப்பை காலாண்டு அடிப்படையில் சரிபார்த்து, வர்த்தக சூழலுக்கேற்ப சந்தைப்படுத்தி பயன்படுத்தவும்.

பங்குகளை மறுதகவல் அடிப்படையில் பராமரிக்கவும்: பங்குச் சந்தை பற்றிய ஒவ்வொரு தகவலையும் (நிறுவனத்தின் ஆண்டு மற்றும் காலாண்டு அறிக்கைகள், மூலதனக் கணக்குகள், முதலீட்டாளர் அழைப்புகள்) பயன்படுத்தி பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

### எதிர்கால சாத்தியக்கூறுகள்:

கூட்டு முதலீட்டுத் திட்டங்கள்: தங்கத்திலும் பங்குகளிலும் கூட்டு முதலீட்டுத் திட்டங்கள் மூலம் நீண்டகால சீரான நிதி நிலையை உருவாக்கலாம். குறிப்பாக, 50%-50% தங்கம் மற்றும் பங்குகள் நிதி திட்டம் வருங்காலத் தேவைகளுக்கு உகந்ததாக இருக்கும்.

பொருளாதார மறுசீரமைப்பு: இலங்கையின் மொத்த அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு முடிந்ததும், பங்குச் சந்தை முதலீட்டின் வளர்ச்சி தீவிரமாக இருக்கும்.

தங்க முதலீடும் பங்குச் சந்தை முதலீடும் இலங்கையின் நிதி மற்றும் முதலீட்டு வரலாற்றில் முக்கிய பங்குகளை வகிக்கின்றன. ஒவ்வொரு முதலீட்டாளரும் தங்களது தனிப்பட்ட நிதி நிலை, ஆபத்து சகிப்புத்தன்மை, மற்றும் நீண்டகால இலக்குகளை கருத்தில் கொண்டு தக்க முதலீடு செய்ய வேண்டும். தங்கத்தின் பாதுகாப்பு மற்றும் பங்குகளின் வளர்ச்சி ஆகியவற்றை ஒருங்கிணைத்த போது ஒரு முதலீட்டாளரின் நிதி இடைவெளி நிலை வெற்றிகரமாக இருக்கும்.

### தங்க முதலீட்டு மற்றும் பங்குச் சந்தை முதலீட்டில் வரி நன்மைகள்:

தங்கம் மற்றும் பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் இலங்கை வரிவிதிப்பு அமைப்பின் கீழ் பல வரி நன்மைகளை பெற முடியும். இவை முதலீட்டாளர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக நன்மைகளை வழங்குகின்றன.

### தங்க முதலீட்டில் வரி நன்மைகள்

நிறுவன வரி (Corporate Tax): தங்கத்தில் முதலீடு செய்வதால் அடிப்படையாக ஏற்படும் வருவாய் பெரும்பாலும் முதலீட்டு வருவாய் என்ற அடிப்படையில் கருதப்படுகின்றது. இது தொழில்முனைவு வருவாயில் சேராது, எனவே வரிச்சுமை வரி விகிதத்திற்கு ஏற்ப வேறுபட்டு காணப்படும்.

மூலதன ஆதாய வரி (Capital Gains Tax): தங்கம் விற்பனையின் மூலம் பெறப்படும் வருவாய் இலங்கையில் தற்போது மூலதன ஆதாய வரிக்கு உட்படவில்லை. இதனால் தங்கம் விற்கும் போது மூலதன ஆதாய வரிசுமையின்றி வருமானம் பெற முடியும்.

விலங்காக்க தங்க சேமிப்பு திட்டங்கள் (Gold ETFs): தங்க ETF-கள் போன்ற தற்காலிக முதலீட்டு திட்டங்களில் முதலீடு செய்து உண்மையான பெறுமதி அதிகரிப்பு இருந்த போதும் விற்பனை செய்து இலாபத்தினை ஈட்டாத காரணத்தினால் வழக்கமான வரியிலிருந்து விலக்கு அளிக்கின்றது. இது வரிப்பட்டியல் முழுவதையும் சீராக பராமரிக்க உதவும்.

தங்க நகைகளின் நிதி பயன்பாடு: தங்க நகைகள் விற்பனையால் வரும் வருவாய் தனிப்பட்ட நிதி ஆதாயமாக கருதப்படுகின்றது.

### பங்குச் சந்தை முதலீட்டில் வரி நன்மைகள்

வட்டி வரியில் விலக்கு: பங்குகளில் முதலீடு செய்தால், அதன் மூலம் கிடைக்கும் பங்கு இலாப வருமானம் (Dividend Income) Withholding Tax என்ற கட்டுப்பாடுக்குள் உள்வாங்கப்படுகின்றது. பெரும்பாலும் பங்குகளில் பெறப்படும் பங்கு இலாப வருமானம் தனிநபர் வரியில் பெரிதும் சுமையில்லாமல் இருக்கும்.

Capital Gains Tax இல்லாமை: இலங்கை பங்குச் சந்தையில் முதலீடு செய்து பங்குகளை விற்பனை செய்வதால் பெறப்படும் மூலதன ஆதாயம் தற்போதைக்கு வரிக்கு உட்படவில்லை. இது முதலீட்டாளர்களுக்கு பெரிய நன்மையைத் தரும்.

பங்குச் சந்தை வரி சலுகைகள் (Stock Market Incentives): பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்காக சர்வதேச நிறுவனங்களும் உள்ளூர் நிறுவனங்களும் வழங்கும் ஞாஈணநு வாய்ப்புகளில் முதலீடு செய்தால், அந்தந்த காலத்தில் அமுல்படுத்தப்படுகின்ற வரிக்கொள்கைகளுக்கு அமைய அந்நிறுவனங்களின் வரிச்சுமையில் குறைவுபடுத்தல் கிடைக்கும்.

### முதலீட்டாளர்களுக்கு முக்கிய ஆலோசனைகள்:


விவரமான வரித் திட்டங்கள்: தங்க முதலீடு அல்லது பங்குச் சந்தை முதலீடு செய்யும் முன் நிதி ஆலோசகர் அல்லது பட்டையக் கணக்காளர் மூலம் உங்கள் முதலீட்டின் வரி சலுகைகளை சரிபார்க்கவும்.

நிதி சட்டங்களில் உள்ள மாற்றங்களைப் பின்பற்றுதல்: இலங்கையின் வரிவிதிப்பு சட்டங்கள் மற்றும் விதிகளிலுள்ள மாற்றங்களை அறிந்து முதலீட்டுத் திட்டங்களைச் சீரமைக்கவும்.

நீண்டகால வரி சலுகைகளைப் பயன்படுத்துதல்: பங்குகளில் அல்லது தங்கத்தில் நீண்டகால முதலீடுகள் செய்தால் குறைந்த வரிசுமையுடன் அதிக நன்மை வழங்கும்.

தங்க முதலீட்டு மற்றும் பங்குச் சந்தை முதலீட்டு மூலம் சரியான திட்டமிடலின் அடிப்படையில் வரிச்சுமையை குறைக்க முடியும். முதலீட்டாளர்கள் தங்களது நிதித் திட்டங்களில் சமநிலையை உருவாக்கி வரிச்சுமையைக் குறைத்து அதிக வருவாயைப் பெறலாம்.

# இலங்கை; 2025-ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய 10 விடயங்கள்



“2025-ஆம் ஆண்டுக்கான இலங்கை அரசின் வரவு-செலவுத் திட்டம் இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு-செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் சமர்பித்தார்.

இதன்படி, 2025-ஆம் ஆண்டுக்கான வருமானமாக 4,990 பில்லியன் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அதேவேளை, செலவாக 7,190 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, வரவு செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையாக 2,200 பில்லியன் ரூபா காணப்படுகின்றது.”

### வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய விடயங்கள்

1) அரச ஊழியர்களின் குறைந்தபட்ச மாதாந்த சம்பளத்தை 24,250 ரூபாவிலிருந்து 40,000 ரூபா வரை அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் 15,750 ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றது

இந்த சம்பள அதிகரிப்பை பல கட்டங்களின் கீழ் செயல்படுத்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

02) தனியார் துறை ஊழியர்களின் மாதாந்த அடிப்படை சம்பளத்தை 21,000 ரூபாவிலிருந்து 2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27,000 ரூபா வரையும், 2026ம் ஆண்டு முதல் 30,000 ரூபா வரையும் அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனைக்காக தனியார் துறை நிறுவன உரிமையாளர்கள்இணக்கம்தெரிவித்துள்ளதாகநிதிஅமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறுகின்றார்.

தோட்டத்தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெருந்தோட்ட தொழிலாளர் ஒருவரின் நாளாந்த அடிப்படை சம்பளத்தை 1700 ரூபாவாக வழங்குவதற்கு அரசாங்கம் தலையீடு செய்யும் என அவர் கூறுகின்றார்.

04) மலையக தமிழர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக 7,583 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள லைன் வீடுகளை அபிவிருத்தி செய்து, அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவதற்காக 4,267 மில்லியன் ரூபா.

மலையக தமிழ் இளைஞர்களுக்கான தொழில் பயிற்சி, வாழ்க்கை தர உயர்வு மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக 2,450 மில்லியன் ரூபா.

மலையக தமிழ் சமூகத்தின் பாடசாலைகளுக்கான நவீன வகுப்பறைகளை அமைப்பதற்காக 866 மில்லியன் ரூபா.

05) ஓய்வூதியத்தை அதிகரிக்க இம்முறை வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

2025-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் தேதி அல்லது அதற்கு பின்னர் ஓய்வு பெறுகின்றவர்களின் ஓய்வூதியம் புதிய திட்டத்திற்குள் உள்வாங்கப்படுகின்றது.

அரச ஊழியர்களின் இடர் கடன் எல்லை 250,000 முதல் 400,000 வரை அதிகரிக்கப்படுகின்றது.

அதற்கு மேலதிகமாக 01.01.2020-ஆம் தேதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளின் ஓய்வூதியம் 2020-ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

06) விவசாயிகளை பாதுகாக்கும் திட்டம் தொடர்பிலும் அநுர குமார திஸாநாயக்க வரவு செலவுத் திட்டத்தில் யோசனை முன்வைத்துள்ளார்.

இதன்படி, பெரும்போகத்தில் அரசாங்கம் நெல் கொள்வனவு செய்வதற்காக 5000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதுடன், விவசாயிகளுக்கான உர மானியத்தை வழுங்குவதற்காக 35000 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது.

07) பொது போக்குவரத்து வசதிகளை நவீனமயப்படுத்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க திட்டமிட்டுள்ளார்.

இதன்படி, கொழும்பு நகர் பகுதிக்குள் பிரதான மார்க்கங்களில் மூன்று நுழைவாயில்களை கொண்ட நவீன பஸ்கள் 100 ஐ சேவையில் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 3000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்ய யோசனை முன்வைக்கப்பட்டது.

அதேபோன்று, ரயில் போக்குவரத்;து திட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் 500 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய ரயில் பெட்டிகளை நிர்மாணிப்பதற்காக 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

08) தமிழர்கள் செறிந்து வாழும் வட மாகாணத்தின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் 2025ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, வட மாகாணத்தில் பிரதான வீதிகள் மற்றும் பாலங்களை அபிவிருத்தி செய்வதற்காக 5000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

முல்லைத்தீவிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி செல்லும் வீதியின் வட்டுவாகல் பாலத்தின் நிர்மாண பணிகளுக்காக 1000 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

09) கிழக்கு மாகாண அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடு செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பொருளாதார அபிவிருத்திக்காகவும், கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை சேவைகளை முன்னோற்றமடைய செய்ய அரசாங்கம் இந்த வரவு செலவுத் திட்டம் ஊடாக யோசனை முன்வைத்துள்ளது.

10) இலங்கை தினம் என்ற தினமொன்றை நடத்த இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

சமூகங்களுக்கு இடையிலான இடைவெளியை குறைக்கும் நோக்கில் இந்த நிகழ்வை நடத்த ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார்.

இந்த தினத்தை நடத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக 300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

# சர்வதேச தாய்மொழி தினம்

ஓர் இனத்தின் அடையாளமாக விளங்குவது மொழி. மொழியினது வளர்ச்சியினை சார்ந்தே அந்த இனத்தின் கலை, கலாசார, சமூக, பண்பாட்டு அம்சங்கள் வளர்ச்சியுறுகின்றன.

ஒரு சமூகம் வாழ்ந்ததற்கான குறியீடாகக் காணப்படுகின்ற இந்த மொழியானது, மக்கள் தமது கருத்துக்களை மற்றவர்களோடு பரிமாறிக் கொள்ள உதவுகின்ற ஒரு ஊடகமாகச் செயற்படத் தொடங்கியதிலிருந்து அந்த மொழியினைச் சார்ந்த சமூக கட்டமைப்புகளும் உருவாகத் தொடங்குகின்றன.

பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்ற பண்பாட்டு மரபுகள், நினைவுகள், ஞாபகச்சின்னங்கள், எண்ணங்கள், நூல்கள், ஆவணங்கள், கலைகள், புத்தாக்கங்கள், புராதனக் காலத்து அறிவுப் பொக்கிஷங்கள், மருத்துவக் குறிப்புகள், வெளிப்பாடுகள் போன்றனவே வளமான எதிர்காலத்தினை உறுதிப்படுத்தும்.

எமது முன்னோர்கள் கட்டிக் காத்து, பராமரித்து வந்த பாரம்பரிய அம்சங்களை, அதனுடைய தாற்பரியங்களை, எதிர்கால சமுதாயத்துக்குக் கடத்தும் ஒரு கருவியான தாய் மொழியினை தரணியில் மேலோங்கச் செய்வதில் நாம் என்றும் பின்னிற்கக் கூடாது.

அந்த வகையில், தாய்மொழிக்காக, போராடிய ஒரு மக்கள் கூட்டத்தினருக்காக உருவாக்கப்பட்ட ஒரு தினம் தான் ‘தாய்மொழி தினம்’.

காலனித்துவ ஆட்சியில் இருந்து உலக நாடுகள் விடுதலை பெற்றுக் கொண்டிருந்த காலகட்டமது. அதனது தொடர்ச்சியாக 1947ஆம் ஆண்டு இந்தியாவும், பாகிஸ்தானும், பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விடுதலை பெற்றன. சுதந்திர பாகிஸ்தான் என்ற கட்டமைப்புக்குள் பாகிஸ்தானின் மேற்கு, கிழக்கு ஆகிய இரண்டு பகுதிகள் உள்வாங்கப்பட்டிருந்தன.

மத ரீதியாக இரு பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் ஒன்றிணைந்தவர்களாகக் காணப்பட்டாலும், மொழி ரீதியாக வேறுபடுத்தப்பட்டவர்களாகவே இருந்தனர். உருது மொழியே மேற்கு பாகிஸ்தானில் (இன்றைய பாகிஸ்தான்) அதிகமாகப் பேசப்படுகின்ற மொழியாகும். கிழக்கு பாகிஸ்தானில் (இன்றைய பங்களாதேஷ்) அதிகளவு பேசப்படுகின்ற மொழி வங்க மொழியாகும்.




அன்றைய காலகட்டத்தில் இருநாடுகளுக்குமான தேசிய மொழியாக இருந்தது உருது மொழியாகும். வங்க மொழியினை அதிகமாகப் பேசுகின்ற கிழக்கு பாகிஸ்தானியர்கள் தம்மீது உருது மொழி திணிக்கப்படுவதனை விரும்பாது, அதனை எதிர்க்கத் தலைப்பட்டனர்.

உரிமைகள் எங்கு மறுக்கப்படுகின்றனவோ அங்குப் போராட்டங்கள் உருவாவது தவிர்க்க முடியாத ஓர் அம்சம். அந்த வகையில் வங்க மொழியினை தமது தேசிய மொழியாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தில் கிழக்குப் பாகிஸ்தானியர்கள் 1952ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இருபத்தோராம் திகதி ‘வங்க மொழி இயக்கம்” என்றவொரு இயக்கத்தினை உருவாக்கினர்.

அந்த இயக்கத்தைச் சார்ந்த மாண வர்கள், அரசியல் தலைவர்கள், கல்விமான்கள், மக்களென பல்வேறுபட்ட தரப்பினரும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டனர். அன்றைய ஆட்சியாளர்களது அடக்குமுறை நடவடிக்கைகள், தொடர்ச்சியான போராட்டங்கள், ஆகியவற்றின் வெளிப்பாடாக 1956ஆம் ஆண்டு வங்க மொழி கிழக்கு பாகிஸ்தானின் தேசிய மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டது.

அந்த போராட்டத்தின் விளைவாக, உயிரிழந்தவர்களின் நினைவு கூறும் முகமாக, ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் இருபத்தோராம் திகதியினை உலக தாய்மொழி தினமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்கின்ற தீர்மானத்தை வங்கதேச அறிஞர் ரபீக்குல் இஸ்லாம் அவர்கள் 1998ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோவில் முன்மொழிந்தார். அதற்கமைய, சர்வதேச தாய்மொழி தினமானது 1999ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ அமைப்பின் பொது மகாநாட்டில் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 2002இன் A/RES/56/262 தீர்மானமானது இந்த பிரகடனத்தை வரவேற்றது. 2002ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பானது பெப்ரவரி மாதம் 21ஆம் திகதியினை தாய்மொழி தினமாக அங்கீகரித்தது.

கால் நூற்றாண்டு காலமாக தெற்காசியாவையே பதற்றப்பட வைத்த ஈழத்தமிழர் போராட்டத்திற்கு ஆதி மூலமாக இருந்ததும் மொழி பிரச்சினைதான். 1965ஆம் ஆண்டு சிங்களத்தை ஆட்சி மொழியாக அறிவிக்க இலங்கை அரசு எடுத்த முயற்சிகளை எதிர்த்து தந்தை செல்வா தொடங்கிய போராட்டமே பின்னர் ஆயுத புரட்சியாக பரிணாமம் பெற்று வங்காள விரிகுடாவை செங்கடலாக மாற்றியது. ‘தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’ எனக்கூறி போராடி தம் உயிரை மாய்த்துக்கொண்டவர் பலர்.

மொழித்திணிப்பின் மூலம் கலாச்சார போராக தொடங்கி ஆயுதப்போராக பரிணமித்த போர்கள் ஏராளம். உலகில் நடைபெற்ற பல போர்களுக்கு காரணமாக இருந்ததும் மொழிதான். ஒரு மொழியை மற்றொருவர் மீது திணிக்க முயல்வதும் திணிப்புக்கு உள்ளாவோர் அதை தடுக்க முயல்வதும், அதற்காக போரிடுவதும், இரத்தம் சிந்துவதும் என மொழியினால் சிவப்புநிறத்தில் எழுதப்பட்ட உலக வரலாற்றின் வரிகள் ஏராளம்.

# வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவனே செயலாற்றும் திறனுடையவன்.




உலகில் பெரும் கோடீஸ்வரர்களைப் பார்த்தால் அவர்கள் தங்களது செல்வத்தை ஒரு தொழிலின் மூலமாக மட்டும் சேர்த்தவர்கள் அல்லர். அவர்கள் முதலில் பணத்தை ஏதேனும் ஒரு தொழிற்றுறைமூலம் உழைத்திருந்தாலும், அவ்வாறு உழைத்துச் சேர்த்த பணத்தை வேறுவகையான புதிய வியாபாரங்களிலும், முதலீடுகளிலும் முதலிட்டு தங்களது செல்வத்தைப் பன்மடங்காக்கினார்கள். இன்று ஐக்கிய அமெரிக்காவில் மிகப்பெரிய நில உரிமையாளர் மைக்ரோசாப்ட் நிறுவனத்தை ஆரம்பித்த பில்கேட்ஸ் தானென்று உலகில் பலருக்கும் தெரியாது. அதேபோல இந்தியாவின் முன்னிலைப்பணக்காரர்களும் இவ்விதமே வெவ்வேறு தொழில் முயற்சிகள் மூலமே செல்வந்தர்களாக உயர்ந்தார்கள் என்பதை அறியமுடியும்.

எமது தாயகமான ஈழத்தில் இயற்கை வளங்கள், கடல், நிலம், காடு, மழை என இயற்கையின் கொடைகள் தாராளமாகவே இருக்கின்றன. எனினும் பெற்றோலியம், விலைமதிப்பற்ற உலோகங்கள் போன்றன மிகமிக அரிதாகவே உள்ளன. அப்படியிருந்தும் எம்மூதாதையார் இந்த நிலத்தை காலத்திற்கேற்ற விவசாயம் செய்து வளமாக்கினார்கள். அது மட்டுமன்றி விவசாயம் செய்ய முடியாத காலங்களில் இலங்கையின் தெற்கு மற்றும் மத்திய இடங்களுக்குச் சென்று வியாபாரம் போன்ற தொழில் முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அதன் மூலம் உழைத்த பணத்தை வைத்து கல்லூரிகளும், ஆலயங்களும் அமைத்தார்கள். எனது சிறுவயதில் நான் முல்லைத்தீவின் முள்ளியவளைப் பகுதிக்கு பள்ளி விடுமுறைக்கு எனது மாமாவின் தோட்டத்துக்குப் போனது ஓர் இன்பமான காலம். எனது மாமா அங்கு அரசாங்கப் பாடசாலையில் ஆசிரியராக இருந்தார். அவர் ஆசிரியர் மட்டுமன்றி ஒரு சுயதொழிலதிபராகவும் இருக்க விரும்பியவர். அதனால் அவர் ஒரு பெரிய நிலத்தை வாங்கி, அதிலிருந்த காட்டைத் துப்புரவாக்கி பெரும்தோட்டம் செய்தார். நான் போயிருந்த போது அங்கு வேர்க்கடலை விதைத்து அந்த தோட்டம் பச்சைப்பசேலென்று இருந்தது. அதன் மூலம் சம்பாதித்த பணத்தை வைத்து எனது மாமா ஒரு கார் கூட வாங்கி வைத்திருந்தார். அவரது ஆசிரியர் சம்பளத்தில் கார் வாங்குவதென்பதையோ வசதியாக வாழ்வதென்பதையோ கனவில் கூட நினைத்துப்பார்க்க முடியாது. ஆனால் அவரது கனவை இன்னொரு தொழில் முயற்சி நனவாக்கி வைத்தது.

இப்போதைய சமுதாயத்தைப் பார்த்தால் ஓர் அரசாங்க வேலை அல்லது தனியார் நிறுவன வேலை என இவற்றில் ஒன்றை மட்டுமே செய்து வருகிறார்கள். அதன் மூலம் கிடைக்கும் வருமானம் குடும்பச் செலவிற்கே போதாது. அதனால் பிள்ளைகளை கல்விகற்க வைக்கவோ பின்பு கல்யாணம் செய்து வைக்கவோ வங்கியிலேயோ அல்லது மற்றவர்களிடமோ கைநீட்டி நிற்க வேண்டியிருக்கிறது. அதற்குத்தான் பல்வேறு வருமான வழிகளை உண்டாக்குவது முக்கியம். அதற்கான சில வழி முறைகளை இங்கு பகிர்கிறேன்.

**வேலை வருமானம் :**

முதலாவதாக எல்லோரும் தங்கள் கல்வியறிவுக்கேற்ற ஒரு வேலையில் இணைந்து, அதற்குத் தேவையான நேரங்களையும் முயற்சிகளையும் கொடுத்து வினைத்திறனாகத் தமது பணிகளைச் செய்ய வேண்டும். பள்ளி ஆசிரியராக இருக்கலாம், வங்கியில் வேலைசெய்பவராக இருக்கலாம், தனியாக கடை வைத்திருப்பவராக இருக்கலாம், எவராயினும் இத்தகைய நிரந்தர வருமான வழியொன்றை உருவாக்கி, தமது குடும்பப் பொருளாதாரத்தின் அத்திபாரத்தைப் பலமாக இடவேண்டும். எனது சிறு வயதில், எனது தந்தையார் எமது கிராமத்தில் பலசரக்கு கடை ஒன்றை நடத்தி வந்த அதேசமயத்தில் உப தபால் அதிபராகவும் இருந்தார். தபால் உப அதிபர் என்ற உத்தியோகத்தின் மூலம் நிரந்தர வருமானமும், கடைமூலம் உப வருமானமும் எமது குடும்பத்துக்கு கிடைத்தது.


**பக்க வருமானம் :**

பக்க வருமானமானது முதல் வேலை செய்த காலங்களைத் தவிர, மீதமான நேரத்தைப் பயன்படுத்தி பணம் உழைப்பதாகும். இதற்கு பல முறைகளை அனுசரிக்கலாம். இப்போது ஆசிரியர்களையும் வைத்திய நிபுணர்களையும் பார்த்தால் அவர்கள் தங்கள் துறைகளிலேயே அரசபணியிலும், அந்தக் கடமை நேரம் முடிந்தபின்னர் தனியார் நிறுவனங்களிலும் வேலை பார்த்து மேலும் பணம் உழைக்கிறார்கள். இதேபோன்று ஏனைய தொழில்களில் உள்ளவர்களும் தமது பிரதான பணிநேரத்தை விட, மேலதிகமாகக் கிடைக்கும் நேரத்தில் வேறு வேலைகள் செய்யலாம். உதாரணமாக காணிகளை மேம்படுத்தி விவசாயம் செய்யலாம். இதன் மூலம் தொடர்ந்து உழைப்பு இல்லாவிட்டாலும் அறுவடைக் காலத்தில் வருமானம் கிடைப்பதுடன், விவசாயத்திலிருந்து வரும் அறுவடை மூலதனம் குடும்பத்தின் வாழ்வாதாரச்

செலவை பெருமளவு குறைக்கலாம்.

**முதலீட்டு வருமானம் :**

உழைக்கும் வருமானத்தை முழுவது மாகச் செலவிடாமல் முதலீடு செய்வதன் மூலம் செயலற்றவருமானம்(Passive Income) செய்யமுடியும். இதற்கு நிறையப் பணம் தேவையில்லை. ஒவ்வொரு மாதமும் சிறிய தொகையைச் சேமிப்பதன் மூலமும், அதை முதலீடு செய்வதன் மூலமும் சேமிப்பை இன்னும் கூட்டலாம். இதற்கு கூட்டுத்திரும்புதல் (Compound return) என்று பெயருண்டு. உதாரணமாக ஒரு இலட்சம் ரூபாவை இருபது வீதம் வருடாந்தத் திருப்பத்துடன் முதலிட்டால் இருபது வருடத்தில் அது 26 இலட்சமாகப் பெருகும். அது மட்டுமன்றி தொடர்ந்து மேலும் சிறிய அளவு பணம் மாதாந்தம் அல்லது வருடாந்தம் முதலிட்டால் சேமிப்பு அதற்கு மேலே வரும்.




**வாடகை வருமானம் :**

இப்போது வாடகை வருமானத்துக்கு வெளிநாடுகளில் அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. வேலை செய்பவர்கள் சேமித்த பணத்தை வைத்தும் மற்றும் வீட்டுக் கடன் (Home mortgage) எடுத்தும் இரண்டாவது வீட்டை வாங்கி வாடகைக்கு கொடுத்து பணம் உழைப்பார்கள். இதன் மூலம் மாதாமாதம் வருமானம் வருவதுடன் வீட்டின் பெறுமதியும் அதிகரிக்கும். அதன் மூலம் அவர்களின் செல்வம் மேலும் அதிகரிக்கும்.

**மற்றவர்களில் முதலிடுதல் :**

மற்றவர்களிடம் முதலிடுதல் என்பது, இன்னொருவரின் எண்ணத்துக்கு செயலுருவம் கொடுப்பதற்காகச் செய்யப்படும் முதலீடாகும். ஒருவரிடம் பணம் உழைப்பதற்காக புதியதான நல்ல யோசனைகள் இருக்கும். ஆனால் அவர்களின் கனவைச் செயற்படுத்த பெரும் முதலீடு தேவைப்படும். அவ்வாறான பிறரின் சிறந்த தொழில்முயற்சி எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் திட்டங்களில் முதலிடுவதன் மூலம் ஒருவர் தான் நேரடியாக வேலை செய்யாமல் பணம் உழைக்க முடியும். இது ஆபத்துக் கூடிய முதலீடு தான். ஆனால் திரும்பல் வீதம் அதிகமாக இருக்கும். இதற்கு சிறிய பங்கான பணத்தைமுதலிடுவதன் மூலம் ஆபத்தைக் குறைத்து, அவர்கள் வெற்றிபெறும்போது திரும்பலைக் கூட்டலாம். எனது இரண்டு ஆரம்ப நிறுவனங்களிலும் இப்படியான முதலீட்டாளர்களைச் சேர்த்ததன் மூலம் எமது வியாபாரத்தை விரிவாக்க முடிந்தது. அப்படி எங்களுடன் ஆரம்ப நேரத்தில் பங்குபற்றியவர்கள் தங்கள் முதலீட்டை பத்து மடங்கு அதிகம் பெற்றார்கள். இதனால் இப்படியான முதலீட்டை 'பெரிய ஆபத்து பெரிய திரும்பல்' (High Risk, High Return) என்று கூறுவார்கள்.

இங்கு சொல்லப்பட்ட பல்வேறு வழிகளிலான தொழில்முயற்சிகளை எப்படித் தொடங்குவது, என்னிடம் இன்று வாழவே பணமில்லை அப்படியிருக்க எப்படி எதிர்காலத்தை சிந்திப்பதென்று சிலர் யோசிப்பார்கள். இது சுலபமான வேலையில்லைத்தான். ஆனால் திட்டமிட்டு எதிர்காலத்தை யோசித்து நிகழ்காலத்தில் சில ஆடம்பரங்களைக் குறைத்து, சேமிப்பை அதிகரிப்பதன் மூலம் இலக்கை அடையமுடியும். இந்த நிலையை அடைய சில நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும். அவையாவன:

வருமானத்துக்கு மேலே செலவிடுவது.

வருமானத்தில் அவசர நிதி சேர்த்து வைக்காமல் விடுவது (குறைந்தபட்சம் 6 மாத செலவுக்குத் தேவையான பணத்தைச் சேமிப்பில் 'அவசர நிதியில் 'வைத்திருக்க வேண்டும்).

எப்போதும் விலை கூடிய சமீபத்திய பொருட்களை கூடிய பணம் கொடுத்து வாங்குவது.

தன்னால் செய்யக்கூடிய சின்ன வேலைகளுக்குக்கூட மற்றவர்களைப் பணிக்கு அமர்த்துவது.

யோசனையின்றி அடிக்கடி விடுமுறை மற்றும் பயணம் புரிவது.

அடிப்படைக் கைவினைகளை சின்ன வயதில் செய்து பழகாதது.

இந்த உலகில் வருமானம் என்பது, ஒரு வேலையைச் செய்வதன் மூலம் மட்டுமே கிடைக்குமென்று சிந்திப்பது மிக்க தவறு. இங்கு மகிழ்வான, வசதிகள் நிறைந்த வாழ்வியலுக்கு பலமுனைகளிலான வருமான வழிகளை உருவாக்க வேண்டும். பில்கேட்ஸ் தொடக்கம் இந்தியாவின் ரத்தன் டாடா வரை பல வருமான வழிகளை உருவாக்கியே கோடீஸ்வரரானார்கள். நாங்கள் கோடீஸ்வரராக ஆகாவிட்டாலும் எங்கள் குடும்பங்களை மற்றவர்களிடம் கைநீட்டி கடன் வாங்காமல் வாழவைக்கவேண்டும். சிறுவயதிலேயே இதற்கான விதையைப் போட்டு பல தொழிற்கலைகளைப் பழகி வளர்வதன் மூலம் பிற்காலத்தில் வெற்றிகரமாக வாழலாம்.

# இணைய வணிகமும் அதன் அடிப்படைகளும்.

அனுதினன்

**ஆடம்பரப் பொருட்களிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் வரை அனைத்துமே, மின்வணிகத்தில் கிடைக்கக் கூடியதாகிவிட்டது. இருந்த இடத்திலிருந்து கொண்டு, நமக்கும் நம்மை சார்ந்தவர்களுக்கும் எதை வேண்டுமென்றாலும் கொண்டு சேர்க்கக்கூடிய அளவுக்கு, மின் வணிகத்தின் வளர்ச்சி, அபரிமிதமடைந்துள்ளது. கடந்த சில வருடங்களில், மிகப் பிரசித்தம் பெற்ற வணிகமுறை எதுவெனக் கேட்டால், யாராயினும் தயங்காமல் கைக்காட்டக்கூடிய வணிகமுறையாக, மின் வணிகம் (E-Business) வளர்ச்சியடைந்துவிட்டது.**



மின் வணிகமானது, தனித்து வாடிக்கையாளர்களின் நேரமின்மை எனும் ஒரு கருவை, மூலதனமாகக் கொண்டு இயங்கும் வணிகமல்ல. மாறாக, மனிதர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் உருவாக்கக்கூடிய பொருட்கள்,சேவைகளையும் வழங்குவதன் மூலமாக, மக்கள் வாழ்வோடு தொழில்நுட்பத்தினூடாக ஒன்றிக்கும் வணிகமாக மாறியிருக்கிறது.

இன்றையநிலையில்,இலத்திரனியல் வணிகச் சந்தையானது தன்னகத்தே எவ்விதமானதடைகளையும்கொண்டிராத முற்றிலும் ஒரு திறந்த சந்தையாகவே (Open Market) இருக்கிறது. இந்தச் சந்தையில், வாடிக்கையாளர்களை தம்வசப்படுத்திக்கொள்ளும் சந்தைப்படுத்தல் திறன் கொண்ட எவருமே இங்கு ராஜாதான். இவ்வாறு தொழிற்படும் மின் வணிகத்தில் ஒரு தனிநபராக அல்லது நிறுவனமாக வெற்றிகொள்ள அடிப்படையாகவுள்ள விதிகள் தொடர்பிலும் அறிந்திருக்க வேண்டியது அவசியமல்லவா?

### சந்தையை உருவாக்குபவர்கள் யார் ?

மின்வணிகத்தைப்பொறுத்தவரையில், கொள்வனவாளர்கள் சந்தையை உருவாக்கவேண்டிய அவசியமில்லை. சந்தை வாய்ப்பைக் கொண்டிராத பொருட்களை அல்லது சந்தை வாய்ப்பைக்கொண்டபொருட்களைக்கூட, எளிமையாக, கொள்வனவாளர்களிடம் கொண்டு சேர்க்கும் வேலையையே, மின் வணிகச் சந்தை செய்கிறது.

பாரம்பரிய வணிக முறையில் கொள்வனவாளர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பது, விநியோகசங்கிலியாகும்(SuppluChain). அதாவது, உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை, வாடிக்கையாளர்களிடம் கொண்டுசேர்க்கும் வரையில், உற்பத்திப் பொருட்கள் மீது சேர்க்கப்படும் மேலதிகச் செலவுகள், உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அதிகப்படுத்துவதேயாகும்.

ஆனால், இணைய சந்தையில் உற்பத்தியாளர் கூட விற்பனையாளராக இருக்கலாம்அல்லதுவாடிக்கையாளரை நேரடியாகச் சந்தித்துக்கொள்ளக்கூடிய மின் சந்தையில், உற்பத்தியாளரே விற்பனையாளராக இருக்கலாம். இதன் விளைவாக, செலவீனங்கள் குறைக்கப்பட்டு, சந்தை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.

இதுவே, கொள்வனவாளர்களையும் உருவாக்கும். எனவே, மின் வணிகத்தில், தனியேகொள்வனவாளர்கள்மாத்திரமே சந்தையை உருவாக்குபவர்களாக இருப்பதில்லை. மாறாக, முதலீட்டுக்கு வருமான மதிப்பீட்டைக் கொண்ட எந்தவொரு பொருட்கள், சேவைகளும் கூட,வணிகவாய்ப்பைஉருவாக்குவதாக அமையும்.

### மின் வணிகம் எதனை சார்ந்திருக்கிறது ?

மின் வணிகம் என்பது, உங்களது இணையதளத்துக்கானபார்வையாளர்களை அதிகப்படுத்துவதோ அல்லது அது சார்ந்த விளம்பரங்கள் மூலம் இணையத்தின் பார்வையிடலை (Webssite Traffic) அதிகப்படுத்தி, அதன் நிலையை உயர்த்துவதோ அல்ல.

மாறாக, உங்கள் இணையதளத்தில், பார்வையாளர்கள் அல்லது வாடிக்கையாளர்கள் செலவிடும் நேரத்துக்கேற்ப, அவர்கள் வர்த்தக பரிமாற்றத்தில் ஈடுபட வைப்பதும், அதன் தொடர்ச்சியாக, அவர்களை மீளவும் இணையதளத்துக்கு வருகைதர வைத்தல் அல்லது அவர்களை தக்கவைத்துக்கொள்ளுவதுமே ஆகும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பாரம்பரிய வணிகமுறையிலும் பார்க்க, இணையவர்த்தகத்திலுள்ளநன்மையே, நீங்கள்விளம்பரம்எனும்பெயரில்செலவு செய்யும், ஒவ்வொரு ரூபாய்க்குமான பெறுபேற்றை அறிந்துகொள்ள முடிவதாகும்.

எனவே, மின் வணிகத்தில் பார்வையாளர் அதிகரிப்புக்கு நீங்கள் செலவு செய்வதைப் பார்க்கிலும்,




வாடிக்கையாளர்களை எப்படிஉருவாக்கிக்கொள்ள முடியும் அல்லது வாடிக்கையாளர்களை எப்படித் தக்கவைத்துக்கொள்ள முடியும் என்பதன் அடிப்படையில் செயற்படுவதுஅவசியமாகும்.

இதுவே, கட்டற்ற திறந்த சந்தையில், இலாபகரமான ஒருவராக உங்களை நிலைநிறுத்திக்கொள்ள உதவும்.

### மின்வணிகத்தில் வாடிக்கையாளர் உறவு எப்படியானது ?

எத்தகைய வணிகமுறையாகவிருந்தாலும் சரி, வாடிக்கையாளர்களுடன் மிகச்சிறந்த உறவைப் பராமரித்தல் என்பது முக்கியமானது. ஆனால், மின் வணிகத்தில், இது மேலும் ஒருபடி முக்கியமானதாக இருக்கிறது.

குறிப்பாக, மின் வணிகத்தில் பெரும்பாலும் விற்பனையாளர்களும் கொள்வனவாளர்களும்சந்தித்துக்கொள்ளுவதே இல்லை. எனவே, ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளாமலே இடம்பெறும் வர்த்தகத்தில், ஒருவரின் உணர்வுகளையும் கருத்துகளையும் புரிந்துகொண்டு, வர்த்தக உறவை பலப்படுத்துவது என்பது சாதாரண காரியமல்ல.

பெரும்பாலான மின் வணிகங்கள், அடிவாங்கும் இடமாகவும் இதுதான் இருக்கிறது. காரணம், சேவைக்கு முந்திய மற்றும் சேவைக்குப் பிந்திய வாடிக்கையாளர் உறவைப் பலப்படுத்தத் தவறுவதன் விளைவாகவே, பெரும்பாலான மின் வணிகங்கள், போட்டித்தன்மைமிக்க சந்தையிலிருந்து வெளியேற்றப்படுகின்றன.

சந்தையில், எவ்வளவு பெரிய நிறுவனமாக வளர்ந்தாலும், வாடிக்கையாளர் உறவு என்பதை மிக உயர்ந்தளவில்கொண்டிருக்கவேண்டியது அவசியமாகிறது.

இல்லையெனில், அதுவே உங்களது வணிகத்தை முடிவுக்கு கொண்டுவரும் காரணியாகமாறிவிடும். வெளிநாடுகளில் இணையவர்த்தகம்தவிர்க்கமுடியாததாக மாறியுள்ள நிலையில், வாடிக்கையாளர் உறவை திறமையாகக் கையாளமட்டும், ஆண்டொன்றுக்கு 36 பில்லியன் அமெரிக்க டொலர்களை, இணைய நிறுவனங்கள் செலவு செய்வதாக ய்லிஷனுளவி இணையத்தளம் குறிப்பிடுகிறது.

இது ஒன்றே, வாடிக்கையாளர் உறவு நவீனமயப்படுத்தப்பட்ட வணிகத்தில் முக்கியத்துவம் பெறுகிறது என்பதற்கு உதாரணமாக உள்ளது.

### இணைய இடைத்தரகர்கள் (Cybermediary) யார் ? எப்படியானவர்கள் ?

இணையப்பரப்பில் வர்த்தகத்தின் வெற்றியே, இடைத்தரகர்கள் அல்லது விநியோக சங்கிலியின் பயன்பாடு குறைவாக இருப்பதே ஆகும். எனவே, வணிக செயற்பாடுகளை இலகுவாக்குகிறோம் என்ற பெயரில், மீண்டும் பாரம்பரிய வணிகம்போல, இடைத்தரகர்களை அதிகப்படுத்திக் கொள்ளக்கூடாது. மின்வணிகத்தில் இடைத்தரகர்களின் செயற்பாடுகளும் பொறிமுறைகளும் சற்றே வித்தியாசமானதாக இருக்கும்.

உதாரணமாக, இணையத்தில் கொள்வனவாளரும் விற்பனையாளரும் வர்த்தகத்தை தனித்து முடித்துக்கொள்ள முடியாது. வாடிக்கையாளர், குறித்த விற்பனையாளரிடம் பொருளை வாங்க விரும்பின், அதற்கான பணத்தைச் செலுத்த வேண்டும்.

அதை நேரடி பணமாகச் செலுத்த முடியாது. எனவே, அதற்காக, இணையப் பணத்தை, (அட்டைகள் அல்லது பணவைப்பு கணக்குகள்) பயன்படுத்த முடியும். இதன்போது, தவிர்க்க முடியாத வகையில், இணையப் பணம் எனும் போர்வையில், இடைத்தரகர்கள் உருவாகுகிறார்கள். அதுபோல, வாடிக்கையாளர்கள் பணத்தை எடுத்தஎடுப்பில் செலுத்துவதில்லை.

அதைச் செலுத்துவதற்கு, விற்பனையாளர்கள் பாதுகாப்பான கொடுப்பனவு முறையைக் கொண்டிருக்கவேண்டும். இதையும் வேறு தரப்பினரிடமிருந்து பெற்றுவழங்குவார்களாயின், அவ்வாறும் இடைத்தரகர்கள் உருவாகுவார்கள்.

இவ்வாறாக, பாரம்பரிய வணிகத்திலிருந்து வேறுபட்ட முறையில் இடைத்தரகர்கள், மின் வணிகத்தை ஆக்கிரமித்திருக்கிறார்கள். இவர்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். இவர்களால் மோசடிகள் இடம்பெறக்கூடும் என்பதுமட்டுமல்லாது, இவர்களுக்குச் செலுத்தும் அனைத்துக் கட்டணங்களுமே பொருட்கள், சேவைகளின் பெறுதியுடன் சேர்க்கப்பட்டு இறுதியில் வாடிக்கையாளர்களையே வந்தடையும்.

மேற்கூறிய அனைத்துமே, மின் வணிகத்தில் இன்றிமையாத வகையில் கவனிக்கவேண்டிய அல்லதுகவனிக்கப்பட வேண்டிய விதிகளாகும். கால மாற்றத்துக்கேற்ப, வணிகத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தவிர்க்கமுடியாமல் ஏற்றுக்கொள்ளவேண்டிய சூழலில், அத்தகைய மாற்றங்களில் நம்மை தொலைத்துக்கொள்ளாமல் எப்படி நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும்என்பதை அறிந்திருப்பதும்,நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகிறது.

# யானைகள் மனிதர்களால் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன – அவை மனிதருக்கு நெருக்கடிகளாக மாறுகின்றன



மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு பயணித்த மீனகயா பயணிகள் ரயில் யானைக்கூட்டமொன்றுடன்மோதுண்டதில் ஆறு யானைகள் உயிரிழந்துள்ளன.

கல்லோயா பிரதேசத்திலுள்ள கவுடுல்ல பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசத்திற்கு அருகில் 141 ஆவது மைல் கல்லில் இவ்விபத்தின் போது அதே இடத்தில் 5 யானைகள் உயிரிழந்துள்ளன. இரண்டு யானைகள் கடும் காயங்களுக்கு உள்ளாகின. அவற்றில் ஒன்று சில மணித்தியாலயங்களில் உயிரிழந்துள்ளது. அடுத்த யானையும் கடும் காயங்களுக்கு உள்ளாகி உள்ளது என்று மிருக வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அந்த யானைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த யானைகள் கூட்டமாக ரயில் தண்டவாளத்தைக் கடக்க முயன்ற சமயமே இவ்விபத்து இடம்பெற்றதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இலங்கையில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான யானைகள் ரயிலில் மோதுண்டு உயிரிழந்திருப்பது அண்மைக்காலத்தில் இதுவே முதல் தடவையாகும். அதனால் இவ்விபத்து நாடெங்கிலும் பேசுபொருளாகியது.

இவ்விபத்தின் விளைவாக ரயில் தடம்புரண்டுள்ளது. ரயில் பாதை பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் மட்டக்களப்புக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆன போதிலும் ரயில் பாதையை சீரமைக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விபத்தின் விளைவாக ரயிலில் பயணித்த பயணிகள் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. ரயில் தடம்புரண்டதால் பயணிகள் மற்றொரு ரயிலில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டதாகவும் ரயில்வே திணைக்கள அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் சுமார் 7000 யானைகள் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. என்றாலும் இந்நாட்டில் யானைகள் ரயிலில் அடிக்கடி மோதுண்டு உயிரிழக்கும் உயிரினமல்ல. மாறாக எப்போதாவது இடம்பெறக்கூடிய நிகழ்வே இதுவாக இருக்கிறது. என்றாலும் வருடத்துக்கு சுமார் 20 யானைகள் ரயிலில் மோதி உயிரிழப்பதாக பதிவுகள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் கடந்த வருடம் ஒக்டோபரில் ஹபரணவில் இருந்து சுமார் 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மின்னேரியாவில் ரயில் ஒன்றில் மோதுண்ட இரண்டு யானைகள் உயிரிழந்தன. ஒரு யானை காயமடைந்தது.

அதேபோன்று 2018 ஆம் ஆண்டில், ஹபரணவில் ஒரு கர்ப்பிணி யானையும் அதன் இரண்டு குட்டிகளும் இதேபோல் ரயிலில் மோதி இறந்தன. அதிகாலையில் ரயில் தண்டவாளங்களை யானைக்கூட்டமொன்று கடக்கும் போது இந்த மூன்று யானைகளும் ரயிலில் மோதுண்டன.

இவ்வாறு கடந்த சில வருடங்களாக ஓரிரு யானைகள் ரயிலில் மோதுண்டு உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அதிலும் இப்போது தான் அதிக எண்ணிக்கையிலான யானைகள் உயிரிழக்க இவ்விபத்து வழிவகுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

என்றாலும் மனிதன் – யானை மோதல்களில் இருபுறமும் உயிரிழப்புகள் அதிகளவில் இடம்பெறும் நாடாக இலங்கை விளங்குகிறது. சில மதிப்பீடுகளின் படி உலகிலேயே இலங்கையில் தான் யானைல் மனிதன் முரண்பாட்டால் அதிகளவிலானோர் உயிரிழப்பதாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் கடந்த ஆண்டு கூட, மனித– யானை மோதல்களில் 170 க்கும் மேற்பட்ட மனிதர்களும் சுமார் 500 யானைகளும் கொல்லப்பட்டுள்ளன.

இவ்வாறு யானை ல் மனிதன் மோதலுக்கு காடுகளை விட்டு யானைகள் வெளியே வருவதே காரணமாக அமைகின்றது.

காடழிப்பு மற்றும் காட்டில் யானைகளுக்கு தேவையான உணவு மற்றும் தண்ணீர் வசதி என்பன குறைந்து வருவதால் அவற்றைத் தேடி காடுகளை விட்டு அவை வெளியே வருகின்றன. இவ்வாறான சந்தர்ப்பத்தில் பெரும்பாலும் வழி தவறியே மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்குள் யானைகள் பிரவேசிப்பதாக சுற்றுச்சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்களது கருத்து உண்மையாக இருக்கவும் முடியும். யானைகளின் பாரம்பரிய நடமாட்டப் பிரதேசங்களும் வாழிடங்களும் தான் பெருமளவில் மக்கள் குடியிருப்பு பிரதேசங்களாகவும், விவசாய நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன. அவ்வாறான பிரதேசங்களுக்கு யானைகள் பெரும்பாலும் வருகை தர முடியும் என்ற கருத்து நிலவவே செய்கிறது.

இந்த நிலையில் தான் யானை – மனிதன் முரண்பாட்டை குறைத்து கட்டுப்படுத்தும் வகையில் காடுகளில் இருந்து யானைகள் வெளியே வருவதைத் தவிர்க்கும் வகையில் மின் வேலிகளும் அமைக்கப்படுகின்றன.

என்றாலும் யானைகள் முகம் கொடுக்கின்ற நெருக்கடிகளும் தீர்த்து வைக்கப்பட வேண்டும். அப்போதுதான் இத்தகைய விபத்துக்கள் மூலமும் யானை, மனிதன் முரண்பாடுகள் மூலமும் யானைகளும் மனிதர்களும் கொல்லப்படுவதைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். அதுவே சூழலியலாளர்களின் கருத்தாகும்.

# மாசிப்பனி மூசிப்பெய்யுது. ஒரு விடிகாலை நினைவு மீட்டல்.

பிரகாஷ் கிளிநொச்சி



இந்த வசனத்தொடர் ஈழத்து பேச்சு வழக்கில் மாசி மாதங்களில் இடம்பெறும் ஒரு வசனம். வருடத்தின் புரட்டாசி மாசத்தில் ஆரம்பிக்கும் மழை, புதிய வருடம் தை மாசத்தில் ஓரளவிற்கு முடிவிற்கு வந்திடும். அதுக்கு பிறகு பங்குனி வெய்யில துவங்க முன்னம் மாசி மாதத்தின் இரவுகளில் பனி கொட்ட துவங்கி விடும். இரவில் படுக்கைக்கு போகேக்குள்ள தலையணையும், போர்வையும் தலைமாட்டில தான் இருக்கும். பிறகு நேரம் போக போக தலையணை ஒரு பக்கம், போர்வை ஒரு பக்கம், பாய் ஒரு பக்கம், நான் ஒரு பக்கம் கிடப்பன். பின்னிரவு தாண்டி நிலம் குளிரும்போது தான் தெரியும், நான் அறை முழுக்க பிரதட்டை அடிச்சுக்கொண்டு இருக்கிறன் எண்டது.

அதுக்கு பிறகுதான் தலையணை, போர்வை, பாய் எங்கெங்ககிடக்குதெண்டு இருட்டுக்குள்ளகையைகாலை போட்டு துழாவி கண்டு பிடிச்சிடுவன். அதுக்குள்ளை அம்மாவிட்டை ஒரு குட்டும், தம்பியிட்டை ஒரு எத்தும் வாங்கியிருப்பன். மெல்ல மெல்ல விடியத்துவங்கும். விடியக்காலம்பிறை நாலரை அஞ்சு மணிக்கெல்லாம் எழும்பி படிக்கவேணுமெண்டு அம்மாவின்ரை ஓடர். மீற முடியாது. அந்த பனிக்குளிருக்குள்ளை எழும்ப மனம் வருமே?. அந்த குளிருக்குள்ளை போர்வையின்ரை ஒரு பக்கத்தை நல்ல இறுக்கமா இழுத்து காலுக்குள்ளை வைச்சுக்கொண்டு, இன்னொரு பக்கத்தை இழுத்து தலைமாட்டுக்குள்ளை செருகி, ஒரு கூடாரம் மாதிரி ஆக்கி, குறண்டிக்கொண்டு குறட்டை விடுகிறது ஒரு தனி சுகம் தான். ஆனாலும் அம்மா விடமாட்டா. டேய் எழும்படா எழும்பி படி எண்டு அதட்டிக்கொண்டே இருப்பா. எழும்பாட்டி சிலவேளை நாயே பேயே எண்டு திட்டெல்லாம் கூட விழும்.

திட்டு விழ விழ தான் அந்த பனிக்குளிர் படுக்கை இன்னும் சுகமாய், இன்னும் கொஞ்சநேரம் படுத்திருக்க சொல்லும். அம்மாவின்ரை ஒவ்வொரு அர்ச்சனைக்கும் அங்கை புரண்டு இங்கை புரண்டு சோம்பல் முறிக்கையுக்குள்ளை, சரியா அஞ்சுமணிக்கு வயல்வெளி நடுவுல இருக்கிற ஐயனார் கோவில் மணி அடிக்கவும், வீட்டுச்சாவல் இன்னொருக்கா கூவவும் சரியாயிருக்கும். இனி இதுக்கு மேல படுக்க முடியாது, எழும்பித்தான் ஆகோணும். இல்லையெண்டால் வீட்டில குடிக்க வச்சிருக்கிற ஒரு குடம் தண்ணியால படுக்கையில வச்சே அம்மா குளிப்பாட்டி போடுவா. இருக்கிற குளிருக்கை இந்த வம்பு வேண்டாமே. விடியக்காலமை இருட்டுக்குள்ளை கிணத்தடிக்கு போக முடியாததால, முதல் நாளிரவே ஒரு பெரிய வாளியில தண்ணி எடுத்து கொண்டு வந்து முன்வாசல் படிக்கு பக்கத்தில வச்சிடுவா. பனியோடை பனியாய் அதுவும் சில்லிட்டு போய் இருக்கும்.

வெட வெடக்கிற குளிருக்குள்ளேயே எழும்பி, போட்டிருந்த முழுக்கைச்சுவெட்டரை, கைகள் இரண்டையும் முழங்கை வரைக்கும் இழுத்துப்போட்டு, வாசல் படியில இருந்த தண்ணியில வேகமா வாயை கொப்புளிச்சுக்கொண்டு, இரண்டு மூண்டு தரம் சளார், சளாரெண்டு முகத்தில தண்ணி அடிச்சு கழுவிப்போட்டு, துண்டால துடைச்சுக்கொண்டு உள்ளை போக அம்மா சுடச்சுட ஆட்டுப்பால் தேத்தண்ணி போட்டுத்தர, பனிக்குளிருக்கு சூடான தேத்தண்ணி இதமாய் தானிருக்கும். பிறகென்ன மண்ணெண்ணெய் விளக்கை கொளுத்தி வச்சிட்டு, படிக்க துவங்குவன். என்னதான் அந்த பணிக்குளிருக்குள்ளை எழும்ப பஞ்சிப்பட்டாலும், எழும்பினதுக்கு பிறகு கோயில் மணிச்சத்தத்தையும், விடியக்காலை குருவிகள், பறவைகளின்ரை கீச்சுக்குரல் சத்தங்கள், வீட்டுக்கூரையில இருந்து சேவல் செட்டையை படபடவெண்டு அடிச்சு கூவும் ஒலிகள, எங்கேயோ தூரத்து கோவிலில் கேக்கும் சுப்ரபாதத்தையும் கேட்டுக்கொண்டு அந்த விடிகாலை நேரத்தை அனுபவிக்கிறதில எனக்கு ஒருக்காலும் அலுக்காது.

ம்ம் இனி விடிஞ்சுட்டுது, ஆறரை ஆச்சுது போல. இனி குளிக்கவேணும். எட்டுமணிக்கு பள்ளிக்கூடத்துக்கு வெளிக்கிடவேணும். கையில அண்ணா பல்பொடியையும், துவாய், கைவாளியையும் எடுத்துக்கொண்டு மூலை வளவு கிணத்தடிக்கு போக ஆயத்தமாக, பின்னால அப்பாச்சி ‘ டேய் தம்பி தலையில ஏதாவது துண்டை கட்டிக்கொண்டு போ அப்பு, வெளியில ஒரே பனிப்புகார் மூட்டமாய் இருக்கு. மாசிப்பனி மூசிப்பெய்யுது. குளிர் காதுக்குள்ளை போனால் தடிமன் பிடிச்சிடும்.‘ அப்பாச்சி சொன்ன படி துண்டை கட்டிக்கொண்டு கிணத்தடிக்கு போறன். சுருட்டு குடிக்கிறவையால மட்டும் தான் ஸ்ரைலா சுருள் விட முடியுமே?. எங்களாலயும் முடியும். எப்பிடி எண்டு கேக்கிறீங்களோ? மாசிப்பனியில நல்லா மூச்சை இழுத்து வாயால விட்டுப்பாருங்கோ. உங்கடை வாயில இருந்தும் புகை சுருள் சுருளாய் வெளிக்கிடும். பனிக்காலத்தில எனக்கு பிடிச்ச விளையாட்டுக்களில இதுவும் ஒண்டு. கிணத்தடியில நிண்டு பார்த்தால் முன்னாலை புகார் மூட்டத்தோடை அரிவிவெட்டுக்கு ஆயத்தமாய் மஞ்சள்நிற நெல்கதிர்மணி பாரம் தாங்காமல் தலைசாய்த்து வயல்வெளி பரந்து விரிகிறது. கிழக்கு திக்கில் அடிவானத்தில் சூரியன் சிவப்புக்கோளமாய், பெரிசாய் மெல்ல மெல்ல பனி புகாருக்குள்ளாலை எட்டிப்பார்க்கிறான். அண்ணா பல்பொடியை வச்சு பல் தேச்சுக்கொண்டே சூரிய உதயத்தையும் வடிவாய் பார்த்துக்கொண்டு எவ்வளவு நேரம் தான் நிற்கிறது.

அண்ணாபல்பொடி, பல்லுதீட்டிநானோ இல்லையோ அரைவாசி வயித்துக்குள்ளை போயிட்டுது. அவ்வளவு இனிப்பு. இனியும் லேட் பண்ண ஏலாது. அம்மா பூவரசங்கம்போடை வந்தாலும் வந்திடுவா. தண்ணியை அள்ளி தலையில ஊத்தவா, விடவா?. உடம்பெல்லாம் வெடவெடக்குது. டக்கெண்டு ஒரு வாளி தண்ணியை உடம்பிலை ஊத்தினால் எல்லாம் சரியாய் போய் விடும். பனிக்குளிரில கிணத்து தண்ணி சூடும். எப்பிடியோ குளிச்சு முடிச்சு வீட்டுக்கு வந்து, ஆறிப்போன தேத்தண்ணியை மடக்குமடக்கெண்டு குடிச்சிட்டு, பாணும் சம்பலும் சாப்பிட்டது போக மிச்சத்தை கட்டிக்கொண்டு, புத்தக பையையும் தூக்கி சைக்கிள் கரியரில வச்சு கொண்டு, இரண்டு பக்கமும் வயல் நடுவால போற ரோட்டில பள்ளிக்கூடத்துக்கு வேகமாக சைக்கிளை மிதிக்கிறன். காலமை நேர பனிக்காத்து இரண்டு காதுகளிலும் மெல்ல இரைகிறது. பனிப்புகார் இன்னும் கலையவில்லை. இண்டைக்கு பனி கடுமையாய் இருக்கு. வெய்யிலும் நல்ல காட்டு காட்டுமோ?. இண்டைக்கு நாடு விட்டு நாடு வந்தாலும், பனி விழுகின்ற நாடுகளில வாழ்ந்தாலும், சொந்த ஊரில வெடவெடக்கிற பனிக்குளிரில, வயல் வரம்புகளில் நடக்கையுக்குள்ள, புல்லில இருந்து சொட்டிக்கொண்டிருக்கிற பனித்தண்ணியில கால் படேக்கை கிடைக்குமே ஒரு சில்லிட்ட உணர்வு. அது சொந்த நாட்டை தவிர வேறெந்த நாட்டிலையும் கிடைக்காத சொர்க்கம்.

# ஆட்டுப் பண்ணை தோல்விக்கான காரணங்கள்

ஆனந்தன் பிரேம்நாத்
லக்சி பண்ணை



1. கொட்டகைக்கு அதிகம் முதலீடு செய்து விட்டு.

ஆடு வாங்க பணப்பற்றாக் குறையால் குறைந்த விலையில் அல்லது குறைந்த எண்ணிக்கையில் ஆடுகளை கொள்வனவு செய்வது.

2. ஆடுகள் வளர்க்க திட்டமிடும் போது கொட்டகை அமைப்பதற்கு 33 வீதத்திற்கும் குறைவான பணத்தையும்.

ஆடுகளுக்காக 66 வீதத்திற்கு மேற்பட்ட பணத்தை செலவு செய்ய வேண்டும் என்று அறியாமல் முதலீடு செய்வது.

3. பேப்பர் கண்க்கீடு வைத்து இலாபம் பற்றிய பெரிய எதிர் பார்ப்புடன் முதலீடு செய்வது.

4. நேரடி கள அனுபவம் இன்றி. அதாவது முன்னனுபவம் இன்றி மற்றவரைப் பார்த்து முதல் தடவையில் அதிக முதலீடு செய்வது.

5. ஆடு வளர்ப்பில் ஈடுபட்டால் 8 தொடக்கம் 10 மாதத்திற்கு பின்பே லாபம் கிடைக்கும் என்பதனை அறியாமல்.

பண்ணை ஆரம்பித்த உடனே அதிக இலாபம் வரும் என்ற அதீத நம்பிக்கை.

6. ஆட்டுப் பண்ணை அமைத்து அனுபவம் பெற்ற பண்ணையாளர்களின் ஆலோசனை பொறாமல். தற்பெருமை கொண்டு சரியான பயிற்சி இன்றி பண்ணை தொடங்குதல்.

7. தங்களுடைய இடத்திற்கேற்ப வளரக்கூடிய ஆடுகளை விடுத்து. தற்பெருமையில் வெவ்வேறு வகையான ஆடுகளை தேர்வு செய்தல்.

8. ஆடுகளை கொள்வனவு செய்ய துவங்கும்போது எந்தெந்த மாதங்களில் ஆடுகளை கொள்வனவு செய்ய வேண்டும் என்ற அறிவின்மை.

9. தாய் ஆடுகள் தேர்வு செய்வதில் ஏற்படும் தோல்வி.

10. எங்கள் சூழலுக்கு தாக்குப்பிடித்து வளரக் கூடிய ஆட்டு இனங்களை தேர்வு செய்யாமல் உயர்ரக ஆடுகளை தேர்வு செய்தல்.

அதோடு விலைகூடிய ஆடுகளை கொள்வனவு செய்தல்.

11. ஒவ்வொரு ஆடுகளுக்கும் குறிப்பேடு இல்லாமல்

ஆடுகளின் அன்றாட செயற்பாடுகளை கவனிக்காமல் வளர்த்து வருவது.

12. மேய்ச்சல் முறையில் வளரக்கூடிய ஆடுகளை அடைப்பு முறையிலும்.

அடைப்பு முறையில் வளர்க்க கூடிய ஆடுகளை மேய்ச்சல் முறையிலும் வளர்க்க முற்படுதல்.

13. ஆடு வாங்குதல், விற்றலில் உள்ள இயல்பான வர்த்தக நுணுக்கம் இல்லாமை.

14. அதிக செலவு செய்து கொட்டகை அமைத்தும். கொட்டகை அமைப்பு நுணுக்கம் தெரியாமல் வெவ்வேறு வகையான பிழைகளை விடுதல்.

15. ஒருங்கிணைந்த பண்ணை என்ற பெயரில் ஆட்டுக்கொட்டகை அருகே மாடுகளையும் கோழிகளையும் வளர்க்க முற்படுதல்.

16. மேய்ச்சலுக்கு செல்லும் ஆடுகள் எப்போதும் மதியத்திற்கு பின்பே அதிக அளவில் உணவினை உட்கொள்ளும் என்ற போதிய அனுபவம் இல்லாமல் ஆடு பார்ப்பவரின் அவசரத்திற்காக ஆடுகளை நேரத்தோடு சாய்த்து வருதல்.

ஆட்டு பண்ணை அமைத்தவர்களில். தோல்வி அடைந்தவரின் எண்ணிக்கை மிக மிக குறைவு

இருப்பினும் இதுபோன்ற வெவ்வேறு தவறுகளால் ஆட்டுப்பண்ணை தோல்வி அடைவதற்கு காரணமாக அமைகின்றது.



# எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு முதுகெலும்பாக அமைந்துள்ள சுற்றுலாத்துறை

**எமது நாடு பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் கண்டு பிரகாசிப்பதற்கு சுற்றுலாத்துறை பிரதான காரணமாக அமைந்துள்ளதுடன், யுத்தம் மற்றும் கொரோனா தாக்கத்தின் பின்னர் தற்போது எமது நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.**

**அந்த வகையில், இந்த வருடத்தின் ஒக்டோபர் 15ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 10 இலட்சத்து 66 ஆயிரத்து 661 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன், அவர்களில் அதிகளவில் இந்தியர்களே வருகை தந்துள்ளதாக சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்தது. இந்தியர்களுக்கு அடுத்தபடியாக ரஷ்யா, பிரிட்டன், சீனா, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் பெருமளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதாகவும், அச்சபை மேலும் சுட்டிக்காட்டியது.**



**தரன் வினோஜா**

இந்நிலையில், எமது நாட்டில் சுற்றுலாத்துறையை புத்துயிர் பெறச் செய்வதற்கான நடவடிக்கையை முன்வைத்துள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, இலங்கைவரும்சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையைஅதிகரிக்கும்நோக்கில் சுற்றுலாப்பயணிகளுக்கு விசேடசலுகை வழங்கும் முன்னோடித் திட்டமொன்றை முன்வைத்துள்ளார்.

இந்தியா, ரஷ்யா, சீனா, மலேசியா, ஜப்பான், இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய 7 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் வீஸா இன்றி இலங்கைக்கு வருகைதருவதற்காக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ முன்வைத்துள்ள இந்த முன்னோடித் திட்டம், நவம்பர் 6ஆம் திகதி முதல் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிவரை அமுலில் இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழில் கொஞ்சும் இயற்கைச் சூழல், பசுமையான நிலப்பரப்பு, அழகிய கடற்கரைகள், திருகோணமலையில் இயற்கைத் துறைமுகம், பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலங்கள், தலதாமாளிகை, சிகிரியா உள்ளிட்ட புகழ்பெற்ற இடங்கள் ஆகியவற்றுடன்சிறந்தசுவாத்தியம்,சிறந்த காலநிலை மற்றும் வளமான கலாசாரப் பாரம்பரியத்தையும்கொண்டமைந்துள்ள எமது நாடு, சுற்றுலாப் பயணிகளை மிக நீண்டகாலமாகவே கவர்ந்த வண்ணமுள்ளது.

இயற்கையாகவே எமது நாட்டில் காணப்படும் இந்த சிறப்பம்சங்கள் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் காண்பதற்கு படிக்கல்லாகவும் அமைந்துள்ளன. ஆகையினால், இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கும் அதனால் ஏற்படும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையிலுள்ள ஆழமான மற்றும் பிரிக்க முடியாத தொடர்புகள் தொடர்பாக விரிவாக ஆராய்வது அவசியம். இது தொடர்பாக தினகரனுக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள்துறை, மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பொருளியல் பிரிவுக்கான உதவி விரிவுரையாளர் ஸ்ரீதரன் வினோஜா கருத்துத் தெரிவித்தார். சுற்றுலாத்துறைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் உள்ள மிக முக்கியமானதொடர்பு அந்நியசெலாவணி வருமானத்தில் தங்கியுள்ளதுடன், இந்த வருமானம்நாட்டின்நிதிஸ்திரத்தன்மைக்கு உயிர்நாடியாக அமைந்துள்ளது. அத்துடன், நாணயமாற்று விகிதமுறை நிலையான தன்மையை பேணுவதுடன் இது கொடுக்கல், வாங்கலில் சமநிலையையும் வலுப்படுத்துகின்றது. இவ்வாறான நிதி ஸ்திரத்தன்மையே பரந்தளவிலானபொருளாதாரவளர்ச்சிக்கு வழிவகுக்கின்றது.

### வேலைவாய்ப்பு பெருகுதல்:

சுற்றுலாத்துறை வளமான வேலைவாய்ப்புகளைஉருவாக்குவதுடன், பல்வேறு களங்களில் பல்வேறு நபர்கள் வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்கின்றனர். விருந்தோம்பல், போக்குவரத்து, சில்லறை வணிகம், உள்ளிட்டவற்றில் வேலைவாய்ப்புகள் உருவாகுவதுடன்,இந்தவேலைவாய்ப்புகள் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களிலும் விரிவடையத் தொடங்கியுள்ளன. இதனால் பல்வேறு திறன்களைக் கொண்ட மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்துக்கு உந்துசக்தியாக சுற்றுலாத்துறை அமைவதுடன், வேலைவாய்ப்பற்றநெருக்குவாரத்தையும் கட்டுப்படுத்துகின்றது. இந்நிலையில், மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதனால், சுற்றுலாத் துறையானது அடிமட்டத்திலிருந்து பொருளாதார வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமைந்துள்ளது.



### தொழில்முனைவோரை ஊக்குவித்தல்:

தொழில்முனைவோரை சுற்றுலாத்துறை ஊக்குவிப்பதுடன், புதிய தொழில்முனைவோரையும் சுற்றுலாத்துறை உருவாக்குகின்றது. எமது பாரம்பரிய உணவகங்கள், உள்ளூர் கைத்தொழில்உற்பத்திக்கடைகள்,சுற்றுலா உதவிநிறுவனங்கள்சுற்றுலாத்துறைக்கு ஏதுவாக அமைவதுடன், புதிய சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் சமையல் கலை நிபுணர்களும் தோற்றம் பெறுகின்றனர். தொழில்முனைவோரால் வருமானம் கிடைப்பதுடன்,புதியகண்டுபிடிப்புகளையும் தொழில்முனைவோர்மேற்கொள்கின்றனர். இதனால், அத்தியாவசிய பொருளாதார வளர்ச்சி தானாகவே ஏற்படுகின்றது.

### உட்கட்டமைப்பு மேம்பாடு:

தொடர்ச்சியான சுற்றுலாத்துறை வளர்ச்சியினால் உட்கட்டமைப்பில் கணிசமானளவு முன்னேற்றம் ஏற்படுமென்பதும்திண்ணமாகும்.ரயில்வே மற்றும் பஸ் போக்குவரத்து அபிவிருத்தி, விமான நிலைய விரிவாக்கம், புதிய சுற்றுலாவிடுதிகள்மற்றும்உணவகங்கள் உருவாக்கம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு மேம்பாடுகள் எட்டப்படுகின்றன.

ஒவ்வொரு சுற்றுலாப் பயணியின் செலவீனமும் பாரிய இலாபத்தை தருகின்றது. உதாரணமாக சுற்றுலாப் பயணி விடுதியில் தங்குவது, உணவு, போக்குவரத்து, வர்த்தக நிலையங்களில் பொருட்கள்கொள்வனவுஉள்ளிட்டவற்றின் மூலம் இலாபம் கிடைக்கின்றது.

சுற்றுலாத்துறை அபிவிருத்தியினால் எமது அரசாங்கம் கணிசமானளவு நன்மை பெறுவதாகவே கூற வேண்டும். ஏனெனில், சுற்றுலாத் தளங்களுக்கான நுழைவுக்கட்டணம்அறவிடப்படுவதினால், வருமானம் கிடைப்பதுடன், இவ்வாறு கிடைக்கும் வருமானமானது எமது நாட்டின் கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்காக முதலீடு செய்யப்படுகின்றது.

எமதுபாரம்பரியமானகலாசாரத்தையும் எமது நாட்டு மரபுகளையும் பேணிப் பாதுகாப்பதற்கும் சுற்றுலாத்துறை அடித்தளம் இடுகின்றது. உள்ளூர் கலாசாரம் மற்றும் மரபுகளை சுற்றுலாப் பயணிகள் கடைப்பிடிக்கும் போது எமது நாட்டுக்கே உரித்தான தனித்துவமான அம்சங்களை பராமரிக்கவும் அவற்றை வெளி உலகுக்கு கொண்டுசெல்லவும் உதவுகின்றது. இதனால் எமது நாட்டின் அடையாளத்தை வளப்படுத்துவது மாத்திரமின்றி,அதிசுவடிய அனுபவங்களை பெற்றுக்கொள்ள ஆர்வமுடையோரையும் கவர்கின்றது.

### எல்லை கடந்த பொருளாதார வளர்ச்சி:

சுற்றுலாத்துறையினால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி எமது நாட்டுக்கு மாத்திரமின்றி, பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வைக் கட்டுப்படுத்துவதுடன், ஏழ்மையையும்கட்டுப்படுத்துகின்றது. எமது நாட்டுஉற்பத்திகளையும்வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு வழிகோலுகின்றது. சுற்றுலாத்துறை அபிவிருத்தி உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதுடன், புதிய நிறுவனங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள், போக்குவரத்து முகவரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யவும் தூண்டுகின்றன.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வும் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. தூய்மையான சூழல், தூய்மையான காற்று, சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கம் உள்ளிட்டவைகளும் சுற்றுலாத்துறைக்கு அவசியமாவதாகவும் ஸ்ரீதரன் வினோஜா விளக்கினார்.


மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவெனில், இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பாரிய தொடர்பு உள்ளமை தெட்டத்தெளிவாகின்றது. ஆகையினால், சுற்றுலாத்துறை எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முதுகெலும்பாகவே உள்ளதுடன் நாட்டின் வளமான,பிரகாசமான எதிர்காலத்துக்கும் வழியமைக்கின்றது. இந்நிலையில் எமது நாட்டில் சுற்றுலாத்துறையை மேன்மேலும் அபிவிருத்தி செய்து, பொருளாதார அபிவிருத்தியில் புதிய அத்தியாயத்தை நோக்கிப் பயணிப்பதற்கான அரசாங்கத்தின் விருப்பத்துக்கு புத்திஜீவிகள், இளைஞர், யுவதிகள், கைத்தொழிலாளர்கள் உட்பட ஒவ்வொரு குடிமகனும் தம்மாலான பங்களிப்பை வழங்கி, நாட்டில் சுபீட்சத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.



# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

0777 43 55 57

# எதடா அந்தக் குரங்கு?



அன்றொரு காலை லங்கா
குரங்கினால் எரிந்து போச்சு
பின்னொரு நாளாம் இன்றோ
குரங்கினால் இருட்டிப் போச்சாம்
என்றொரு கதையைச் சொன்னார்
எப்படிப் பொருந்தும் ஐயா?

இன்றைய உலகின் கண்ணே
எத்தனை தொழிநுட் பங்கள்?
ஒன்றது கெட்டுப் போனால்
இன்னொன்று தானாய் வந்து
’ஓட்டோ’வாய் இயங்கும் என்று
ஏட்டிலே படிக்கும் போதோ
ஏதேதோ புழுகி வைத்தார்
நாட்டிலே இவற்றில் ஒன்று
நமக்கேதும் பொருந்தா தாமோ?

பாட்டிலே சொன்னா லென்னை
பிடித்துமே உள்ளே போட
மாட்டினம் என்றால் ஒன்றை
மளமள வென்று சொல்வேன்
கேட்பவன் கேனை என்றால்
குரங்கொன்று நாட்டைப் பூரா
’சோட்’டினால் இருட்டாய் ஆக்கும்
சோகத்தை என்ன சொல்ல?

பகலது குரங்கு பாய்ந்து
போனது கரண்டு; ஓ.கே!
இரவது என்ன பாய்ந்து
இருண்டது என்று சொல்வார்?

கவிஞர் வ. வடிவழகையன்

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.02.2025 இல் வெளியிடப்பெற்றது.